தென்றல்
வார இதழ்
ஆசிரியர்: **கண்ணதாசன்**

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, புரட்டாசி 24 (10-10-'59). சனிக்கிழமை | இதழ் 17

கடந்த வாரம் ரூஸ்வெல்ட் ஐசனேவரைக் கண்டாராம்.

காந்தி பிறந்தது பம்பாயிலாம்!

ஏனனத்தின் மொத்த உருவங்களெல்லாம் இந்தத் துணைக்கண்டத்தில் அமைச்சர்கள் என்ற பெயரில் உலவுகின்றன. உங்கள் ஊரில் வேடிக்கைக் காட்சிகள் ஏதேனும் நடத்த வேண்டுமென்றால், உடனே ஓர் அமைச்சரை அழையுங்கள். மிகப் பெயர்பெற்ற கோமாளிகளைவிட அழகான நகைச்சுவை விருந்தை அவர்கள் வழங்கிவிடுவார்கள். வெளிநாடுகளிலும் பலர் அமைச்சர்களாக இருக்கின்றார்களே-அவர்கள் இவர்களிடம் பாடம் கற்கவேண்டும். அவர்களெல்லாம் தாம் செய்த செயல்கள், தீட்டிய திட்டங்கள், நிறைவேற்றிய பணிகள் முதலியவற்றைச் சொல்லி வாக்குக் கேட்பார்கள், ஆனால் இங்குள்ள அமைச்சர்களோ அவ்வளவு தொலை உட்லை அலட்டிக்கொள்ளமாட்டார்கள். பேசாமல் மேடையிலேறுவார்கள். "வந்தே மாத்ரோம்" என்பார்கள். ஏமாறுகின்ற மக்களும் அதற்கு ஒப்பம் தெரிவிப்பார்கள். ஆயிரம் போலீசாரும், ஐந்தாறு கூலிகளும் கூடியுள்ள அந்த "பிரம்மாண்டமான" கூட்டத்தில் அமைச்சர் முழக்கிக் கிழிப்பார். "காந்தி கட்சி உங்கள் கட்சி. நாங்கள் எல்லாம் காந்தி கட்சி. நீங்க எல்லாம் காந்தி கட்சி. ஆக நீங்க எல்லாம் காந்தி கட்சிக்கே ஓட்டு போடுவீங்கன்னு எங்களுக்குத் தெரியும். நாங்க தேர்தலிலே நிற்கிறோம். பாத்துக்குங்க" என்று முழக்கி முடித்து, "மகாத்மா காந்தீக்கீ......" என்றவாறே, கூடியிருக்கும் கூலிப்படையைப் பார்ப்பார். அது உடனே 'ஜே" என்ற குரலை, "மைக்" அலற, மைதானம் இடியக்கிளப்பும். அமைச்சர் தம் சாதனை முடிந்த பெருமையில் அடுத்த வண்டியில் ஊருக்குத் திரும்பிவிடுவார். அப்படித்தான் இந்த ஆண்டும் காந்தி விழா கொண்டாடியிருக்கிறார்கள்.

இந்தக் காந்தி விழா நாட்களிலும் அதற்கு முந்திய பத்துப் பதினைந்து நாட்களிலும் இந்தச் சென்னை மாநில அமைச்சர்கள் ஆடியுள்ள திருவிளையாடல்கள் ஒன்றல்ல; இரண்டல்ல. ஓர் அமைச்சர் சென்னை விலங்குக் காட்சி சாலையில் குரங்குகளோடு கைகுலுக்கினாராம். "இனம் இனத்தோடு சேர்கிறது. உனக்கேன் கவலை?" என்பீர்கள். எனக்கொன்றும் கவலை இல்லை. அதைக் கேட்க மகிழ்ச்சியாய் இருந்ததால்தான் எடுத்துச் சொன்னேன்; எழுதிக் காட்டுகிறேன். இதே "மூதாதை" தான் மற்றோர் அரசியல் வாதியை கோமாளி என்றது. அந்தக் கோமாளி இந்த "மூதாதை"யின் ஊருக்குள்ளேயே நுழைந்துவிட்டது; அத்தோடு அந்த ஊரில் தன் இயக்கத்தின் கிளையையும் நிறுவிவிட்டது.

நிற்க, இந்த மூதாதையையும் தோற்கடிக்கும் 'மேதாவி" ஒன்று உண்டு. அது அண்மையில் தனது திருவிளையாடல்களைப் பெருக்கி வருகிறார். நெய்வேலியில் அணைகட்டுவதாகச் சொல்லித் திரிந்தார் அந்த மேதாவி. அதனால் அவர் அணைக்கட்டு அமைச்சர் எனப்பட்டார். இந்தப் பெயர் மறைவதற்குள், இன்னும் பல பெயர்களைப் பெற்றிருக்கிறது.

சிதம்பரத்தில் இடைத் தேர்தல் ஒன்று நடக்கவிருக்கிறது. அமைச்சர்கள் பலரும் அங்கு முகாமடித்திருக்கின்றனர். ஆளைப்பட்ட தலைவர்களெல்லாம் அங்கே கூடாரம் அடித்து, ஆடாத ஆட்டமெல்லாம் ஆடித் தீர்த்திருக்கின்றனர். இவர்களுக்குள்ளே முதலான இடத்தைப் பெறுபவர் நமது "மேதாவி"தான். நெய்வேலியிலே அணை கட்டுவதாக, திருச்சிப் பொது மக்களிடத்திலே கூறி, தன்மதி நலத்தைக் காட்டிக் கொண்டவரல்லவா அவர்! அந்த மதிநலம் மேலும் மேலும் பெருகியிருப்பதைக் காட்டக் கருதியோ என்னவோ, தில்லையிலே கேட்டாராம் இப்படி ஒரு கேள்வி: "நாங்க சோறு போட்டோமே! எங்களுக்கா ஓட்டுப் போட மறுக்கிறீர்கள்?" நல்ல கேள்வி! ஆனால் "எதிர்க்கட்சியினரைக் கலக்கு கலக்கென்று கலக்கிவிட்டார்" இந்த வினாவால். ஒருவனை மக்கள் ஆட்சிக்கு அனுப்புகின்றனர் என்றால். அவன் மூலம் தங்களுக்கு வேண்டியதைப் பெறத்தானே அனுப்புவர்? அவன் அவற்றை ஒழுங்காகத் தந்திருந்தால் தானே அவனுக்கு மறுபடியும் வாக்களிப்பர்? குறிப்பிட்ட இந்த ஆட்சியில் எந்த வகை நன்மையும் விளைந்ததாகக் கருதவில்லை மக்கள். அதனால் வாக்குகள் மாறாகத்தான் விழும் என்பதை உணர்ந்த அவர், இப்படிக் கத்தியிருக்கிறார். இவர் படியளந்த அரிசியின் பெருமையை நறுமணத்தை தாய்மார்களிடத்தில் தான் கேட்க வேண்டும். இருந்தும் இவர் இப்படிப் பேசுகின்றார் என்றால் இன்னும் பல நாட்களுக்கு ஊரை ஏமாற்றி வாழமுடியும் என்றே எண்ணுகிறார்போலும்...

இதே அணைக்கட்டு அமைச்சர் அண்மையில் ஓரிரு அரிய சேதிகளை வெளியிட்டிருக்கிறார். அடுத்தவர் யாரிடமும் இவற்றைச் சொல்லிவிடாதீர்கள். ஒன்று, அவர்கள் அறிவு பெருகிவிடும்; அல்லது திடீரென்று வந்து மோதும் ஆராய்ச்சிக் கொத்துக்களால் அறிவு கலங்கிவிடும். என்ன துன்பப்பட்டதோ இந்நாடு. இவர்களையெல்லாம் அமைச்சராய்ப் பெற?

கடந்த 2-10-59 அன்று மிகப் பரவலாக, காந்தியார் பிறந்த நாள் துணைக் கண்டமெங்கும் கொண்டாடப் பெற்றது. அமைச்சர்கள் ஊரூராய்ச் சென்று முழக்கிக் கிழித்தனர். சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையிலும் "தமிழ்நாடு காங்கிரசு"க்காரர்களால் கொண்டாடப் பெற்றது. சாதி பேதங்களை ஒழிக்கப் புறப்பட்ட "அச்சம்பட்டி கிட்டப்ப நாயக்கர் மகன் இராசாராம நாயக்கர்" தலைமை ஏற்றார். அவ்வாறு அவர்கள் விழாக் கொண்டாடியதே "ஒரு மகத்தான காரியங்களாகும்" [இந்த வாக்கியம் தோழர் எல்லைப் பிள்ளையார் சொன்னபடியே எழுதப்பட்ட பொன்மொழியாகும்.] அந்த "ஒரு மகத்தான காரியங்களுள்" ஒன்றுதான் அணைக்கட்டு அமைச்சர் அவர்கள் முழக்கிக் கிழித்ததாகும். அணைக்கட்டு அமைச்சர் தம் பேச்சிடையே இரண்டு அரிய பெரிய சேதிகளைச் சொன்னார். அவற்றைக் கேண்மின்!

காந்தியார் பம்பாயில் பிறந்தார்.

கடந்த வாரம் ஐசனேவரை ரூஸ்வெல்ட் சந்தித்துப் பேசினார்.

ஆகா எவ்வளவு பெரிய உண்மைகள்! எத்துணை அரிய சேதிகள்!

சின்னக் குழந்தையும் சொல்லும், "காந்தியார் போர்ப்பந்தர் என்ற சமத்தானத்தில் பிறந்தார்: அது கத்தியவார் பகுதியில் தனி ஆட்சியில் இருந்த இடம்!" என்று.

— 8-ம் பக்கம் —

அணைக்கட்டு அமைச்சர் தரும் அரிய சேதிகள்.

நின்றதுபோல் நின்றானே!

நெடுந்தூரம் பறந்தானே!



பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் இறந்துவிட்டார். நினைக்கவே முடியவில்லை! அவரா? இருபத்தொன்பது வயதும் நிரம்பாத அந்த இளைஞரா? அவரா இறந்துவிட்டார்? கனவிலேகூட நியாயமான நிகழ்ச்சிகள் நடக்குமே! இந்த அநியாய நிகழ்ச்சி உண்மையிலேயே நடந்ததா? இருபது திங்கள்கூட முடியவில்லையே, திருமணம் நடந்து! ஐந்து திங்கள் கைக்குழந்தை, இன்னும் "அப்பா!" என்று சொல்லப் பழகவில்லையே! பிஞ்சு மகளையும் பேதையிளம் மனைவியையும், "ஆருத்துயரில் அரற்றுங்கள்" என்று சொல்லி, மீளாத் துயிலில் வீழ்ந்தானா? ஐயோ, கொடுமையே! வெங்கொடுமைச் சாக்காடே! சூடு தணியாத இளங்குருதி குடிப்பதற்கோ, பாடுங் கவிமகனின் பக்கத்தில் நெருங்கி வந்தாய்? எப்போதும் சிரித்திருக்கும் இளையமுகம் எங்கே? முப்போதும் தமிழ் பாடும் முன்னோடி எங்கே? சிந்தனையில் படை திரட்டும் இருவிழிகள் எங்கே? சிரித்தபடி வரவேற்கும் மாகவிஞன் எங்கே? மறைந்தானா? இனி, வரவேமாட்டானா? எழுதுகின்ற கையும், எழுதுகோலும் நடுங்கித் துடிக்கின்றனவே! அவன் புகழை எழுதவேண்டிய கைகள், மறைவை எழுதுகின்றனவே.

எதை யெழுதுவேன்? எப்படி யெழுதுவேன்? பத்து நாட்கள் அவன் நோயில் படுத்திருந்தால், "செத்துவிட்டால் என்ன செய்வது?" என்று சிந்தித்திருப்பேன்! நின்றதுபோல் நின்றானே! நெடுந்தூரம் பறந்தானே! காலையிலே கண்டேனே! கவலையின்றிச் சிரித்தானே! எட்டு மணிக்குச் சுவைநீர் அருந்தினான். ஒன்பது மணிக்கு எப்படியோ வருகிறதென்றான். "எம். ஜி. ஆருக்கு ஆளனுப்புங்கள்! அவருக்குமட்டும் சொல்லுங்கள்!" என்று தன் அண்ணனை அவசரப்படுத்தினான். புரட்சி நடிகருக்குச் செய்தி வந்தது. நான் பதறிப்போனேன். "அவ்வளவு ஆபத்தில்லை!" என்றார்கள். எனினும் புரட்சி நடிகர் அமைதிகொள்ளவில்லை. உற்றவிடத்துக் கைகொடுக்கும் அந்த உத்தமக் கலைஞர், தானே புறப்படத் தயாரானார். காலிலே கட்டு; வெளியிலே செல்ல முடியாத சூழ்நிலை. அவரைத் தடுத்து நிறுத்திவிட்டு, அவர் தமையனார் சக்கரபாணியும், டைரக்டர் ராமதாசும், நடிகர் சிவானந்தமும், பணிபுரியும் படைக்கலங்களான புத்தூர் நடராசும் குண்டுமணியும் நானும் இரண்டு கார்களிலே சென்றோம். வீட்டிலிருந்து, பொது மருத்துவமனைக்குக் கொண்டுபோய்விட்டார்கள். மருத்துவமனைக்கு ஓடினோம். ஐயோ! எப்படிச் சொல்வேன்? கவிஞன் நினைவிழந்து கிடந்தான்! "பேசமாட்டானா!" என்று எதிர்பார்த்தோம். என்ன நோயென்பதும் புரியவில்லை. மருத்துவர்கள் கூடினார்கள்; நோயைக் கண்டுபிடிப்பதில் முனைந்தார்கள். பெரிய மருத்துவர் சிறிது கலக்கத்துடனேயே, என்னை அழைத்தார். "மன்னிக்கவேண்டும்!" என்று ஆரம்பித்தார்; எனக்கு அடிவயிற்றில் நெருப்புப் பற்றியதுபோல் இருந்தது. "இது மூளை நோய். இரத்தக்குழாய் வெடித்திருக்கிறது. நான் உங்களுக்கு நம்பிக்கை தரமுடியாது! இருப்பினும் முழு முயற்சி செய்கிறேன்!" என்றார். என் நெஞ்சு பதறியது; தொண்டை அடைத்துக்கொண்டது. "எப்படியாவது பிழைக்க வைக்கவேண்டும்!" என்றேன். அவர் அமைதியாகவே இருந்துவிட்டார். நம்பிக்கையிழந்தவராகவே அவரிருந்தார். எனக்கு நம்பிக்கையிருந்தது. "கல்யாணசுந்தரம் சாகமாட்டான்! நடக்கும்போதும் எறும்புகளைக்கூட மிதிக்காது நடப்பவனாயிற்றே! அவனை நெருங்கச் சாவுக்குத் துணிவேது! இளம் மனைவியை விட்டு, பழம் பெருந்தமிழகத்தை விட்டு, முதிய தாய் தந்தையரை விட்டு, நண்பர்களைவிட்டு, அவனைப் பிரித்து எடுத்துச்செல்ல, எந்தச் சக்தியாலும் முடியாது!" என்று நம்பினேன். கவிஞரின் உடன்பிறந்த தமையனார் ஓடிவந்தார். "அண்ணா! தம்பி ஏமாற்றி விடுவானா? அவன் கொடுத்த சோற்றைத்தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்! அதிலே மண்ணை அள்ளிப்போட்டு விடுவானா?" என்று கதறினார். அவருக்கு ஆறுதல் சொல்லக்கூடிய துணிவு அப்போது எனக்கிருந்தது! ஆனால், கவிஞனை மருத்துவர்கள் ஆப்பரேஷன் தியேட்டருக்குத் தூக்கிச் சென்றபோது என் குருதி நாளங்கள் கொதித்தன! நாடி நரம்புகள் ஆடி அடங்கின! கலங்காத சக்கரபாணியும் கலங்கினார்! "மருத்துவர்கள் என்ன சொன்னார்கள்? என்ன சொன்னார்கள்?" என்று திரும்பத் திரும்பக் கேட்டார். "நம்பிக்கையிருக்கிறது!" என்றே பதில் சொன்னேன். மருத்துவ மனையில் கவிஞனை விட்டு, வெளியேற மனமில்லாமல் நின்றோம். மதியம் இரண்டு மணிக்கு, "நிலைமை பரவாயில்லை!" என்று ஒரு மருத்துவர் சொன்னார். கலங்கிய கண்கள் மலர்ந்தன. "ஸ்பெஷல் வார்டு" பார்ப்பதற்கு, சக்கரபாணி ஓடினார் மறு நாள்தான் கிடைக்குமென்றார்கள். அதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, மீண்டும் வராந்தாவிலேயே வந்தமர்ந்தார். ஆனால்... அதன் பிறகு இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை. சரியாக 3-45-க்கு ஒரு மருத்துவர் வெளியே வந்து, கவிஞன் முடிவுற்ற செய்தியைச் சொன்னாராம. அப்போதுதான் மருத்துவ மனையிலிருந்து புறப்பட்டுப் படப்பிடிப்பு நிலையத்திற்குச் சென்றிருந்த எனக்கு, இந்தச் செய்தி தரப்பட்டது.

என் அன்னை இறந்தபோது நான் அழுதேன். அந்த அழுகை அரைமணி நேரத்தில் ஓய்ந்தது. என் தந்தை இறந்தபோது கலங்கினேன். அந்தக் கலக்கத்தையும் அடக்க முடிந்தது. ஆனால் கல்யாணசுந்தரம்...என் கவிதைகள் வெளியீட்டு விழாவிலே, இலட்சக்கணக்கான மக்கள் நடுவே, என் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு பெருமை தேடித் தந்தானே, அந்தக் கல்யாணசுந்தரம்... என்னிலும் உயர்ந்தவன் என்று நான் உரிமை கொண்டாடிய அந்தக் கல்யாணசுந்தரம்...புரட்சிக் கவிஞரிடம் பாடம் கேட்டானே, அந்தக் கல்யாணசுந்தரம்... "அண்ணா! நீங்கள் வருகிற பணத்தையெல்லாம் செலவழித்து விடுகிறீர்கள். எப்படியும் உங்களுக்குச் சொந்தமாக ஒரு வீடும் நிலமும் வாங்கிவிட வேண்டும். நீங்கள் பாட்டெழுதும் இடங்களில் பணம் வாங்கக்கூடாது. நான் அவற்றை வாங்கி, தங்கள் துணைவியார் பெயருக்குப் பத்திரம் பதிந்து விடுகிறேன்!" என்று உரிமையோடு சொன்னானே, அந்தக் கல்யாணசுந்தரம்...... ஐயோ! அம்மா! வேகிறதே நெஞ்சு...அவன் இறந்த செய்தி கேட்டபோது, அழுதேன்; விம்மினேன்; இன்னும் அடங்கவில்லையே அது.

இரண்டாண்டுக் காலத்தில் "படபட"வெனப் புகழேணியில் ஏறி, எவரும் பெறமுடியாத வாய்ப்பைப் பெற்று, பட்டுக்கோட்டை என்ற நகருக்கே பெருமை தேடித் தந்த கலைஞனாக விளங்கி, சூறுவளிச் சுற்றுப்பயணம் செய்து, "போதும்!" என்று அலுத்தவன்போல் முடிந்துவிட்டானே!

"எனக்கு ஓய்வில்லை. கல்யாணத்தைக் கூப்பிட்டு எழுதச் சொல்லுங்கள்!" என்று நான் சொல்ல, "இது, அண்ணா எழுதினால்தான் நன்றாக இருக்கும்!" என்று அவன் சொல்ல, "இப்படி இருவர் திரையுலகில் நட்புக் கொண்டதில்லை!" என்று சொல்லும்படிக்கு வாய்த்த எங்கள் நட்பு, சாவின் வாயிலே போய் விழுந்ததே!

திரையுலகில் பாடலெழுதுவோர் வரலாம்; போகலாம்! ஆனால் ஒரு பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் இனி வரமாட்டான். "ஆரம்பமானான் பெண்ணுக்குள்ளே! அவன் ஆடி அடங்கிவிட்டான் மண்ணுக்குள்ளே!" திரையுலகில் அவனே தத்துவஞானி! ஆழ்ந்த சிந்தனை, அழுத்தமான சொல்லாட்சி, ஒரு வரிக்கு மறுவரி உயிர் கொடுக்குந் தன்மை - அவன் எழுதிய பாட்டெல்லாம் அப்படி அமைந்தன!

போய்விட்டான்! சொல்லிக் கொள்ளக்கூட நேரமில்லாமல் போய் விட்டான்! "சொல்லுறதைச் சொல்லிப்பிட்டேன்; செய்யிறதைச்செஞ்சுக்குங்க!" என்ற தன் பாட்டைப் பாடமாக விட்டு விட்டுப் போய்விட்டான்.

கல்யாணசுந்தரம்! இறந்தவர்கள் அனைவரையும் மறந்துவிடும் நாடு இது! ஆனால், என் ஆயுள்காலம் வரை, நான் மறக்கமுடியாத பெயர் உன் பெயர்தான்!

என் உயிர் பிரிந்துவிட்டது. இப்போது என் உடம்பில் ஓடிக்கொண்டிருப்பது உன் உயிர்தான்! என் வரையில் நீ, சாகவில்லை! என் சாவிலேதான், உன் சாவடங்கும்! ★

கண்ணதாசன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 10—10—'59 | இதழ் 17

சிதம்பரம் இதம்பெற... திராவிடம் நலமுற...

குடியரசு நாட்டில் தேர்தல் ஒரு கடமை. "பாரத" நாட்டில் தேர்தல் ஒரு சடங்கு.

அரசியல் அகராதியில் வாக்குச் சீட்டு என்பது உரிமைச் சீட்டு என்று பொருள் படும்; பண்டிதர் அகராதியில் அது ஓர் ஏமாற்றுக் கருவி என்பது புலப்படும்.

நீதியும் நேர்மையும், தூயவர்களும் தொண்டர்களும் தாம் சட்டமன்றத்திற்கு ஏற்றவர்கள் என்கின்றன. காமராசரிசமோ பணமுதலைகளும் பதுக்கல் பேர்வழிகளும்தாம் ஆள்வதற்கு ஏற்றோர் என்று சொல்கின்றது.

மாறுபாடான கருத்துக்கள் இவை. ஒன்றுக்கொன்று மோதிக்கொள்கின்றன.

நாம் முன்னவற்றின் பக்கம். அவர்கள் பின்னவற்றின் தந்தையர்கள்.

இவற்றுள் யார் கூற்று வெல்லப்போகிறது என்பதை வரும் 18-ந் தேதி, தில்லைத் தொகுதி முடிவுகட்ட இருக்கிறது.

இஃது ஓர் இடைத்தேர்தல். ஏற்கனவே இருந்த சாமி சகசானந்தா என்ற தனித்தொகுதி உறுப்பினர் மறைந்ததால், இத்தேர்தல் நடக்கிறது.

இடைத்தேர்தல், பொறுப்பேற்றிருக்கும் ஆளும் கட்சியார் செய்த செயல்களை மக்கள் ஏற்றுக்கொண்டார்களா என்பதைக் காட்டும் காலக் கருவி. ஆளும் கட்சியின் வழிமுறைகள் அறிவுக்கு ஒவ்வாதனவாயும் நலத்திற்கு வழிகாட்டாதனவாயும் இருந்தால், அவற்றைப் பிடிக்காத மக்கள் தம் வெறுப்பைத் தெரிவித்துக்கொள்வர். இந்தச் சிக்கலான கட்டம் இப்போது தில்லை மக்களுக்கு வந்திருக்கிறது.

பச்சைத்தமிழர் காமராசர் பதவிப் பல்லக்கேறி, ஆண்டுகள் பலவாகி விட்டன. சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சரான அவர், பலவற்றில் கோட்டைவிட்டிருக்கிறார். "தமிழ்நாடு" என்று நம்நாட்டிற்குப் பெயர் வைக்க மறுத்தார்; துறைமுகத்திலே ஆறு பேரைச் சுட்டுத் தள்ளினார்; முதுகுளத்தூரிலே மூண்ட கொடுந்தீயை தக்கபடி முயன்று அணைக்கத் தவறினார்; வானொலியைப் பாழொலி என்றார்; அடக்கி ஒடுக்கப்பட்டு, உணவுமண்டல ஏற்பாட்டிலிருந்து தம்மைத் துண்டித்துக்கொள்ளும் துணிவு பெறத் தவறினர்.

"பஞ்சாப் வங்காள அகதிகளுக்கும், தாய் வழியில்கூடச் சொந்தமற்ற தலாய்லாமாவுக்கும் கோடி கோடியாய்க் கொட்டியழும் தில்லி அரசே! கதறிக் கதறிக் கண்ணீர் கொட்டித் அழும் ஈழத்துத் தமிழர்களுக்கு உதவ மறுப்பதேன்? உங்கள் உள்ளப்பகையைப் பாகுமொழியால் மறைப்பதேன்?"—இவ்வாறு தட்டிக் கேட்கத் தவறினர் சென்னை அரசினர். ஐந்தாண்டுத் திட்டங்களில் நம்மிடம் வாங்கும் வரிக்கேற்ப வளம் செய்து தராத நேருவின் கொற்றத்தைக் கூறு கூருகத் துண்டாடத் தவறினர். நமக்குப் புரியாத - வேண்டாத ஒரு மொழியை நம்மீது திணிக்கின்றனர் வடவர். அந்தக் கொடுமைக்கும் ஆலவட்டம் சுற்றினர், "கோல"மதி முகத்தோடு கொலுவீற்றிருக்கும் சீரார் காமராசரும் சிந்தனைவல்ல சுப்பிரமணியரும், இத்துணைத் தவறுகளை இழைத்த பின்னரும் எமக்கே வாக்களிப்பீர் என்று வருகின்றனர் காங்கிரசார்.

இந்தத் தில்லைத் தொகுதியிலே, இவர்கள் நிறுத்தியிருக்கும் அபேட்சகர் வரலாறே, இவர்களின் தவறுக்கெல்லாம் தலைமுடியாய் அமைந்துவிட்டது.

இத்துணைத் தவறுகளையும் செய்துவிட்டு உங்கள் வாக்குக் கேட்க வந்திருக்கின்றனர். இதயமற்ற இவர்களுக்கு உங்கள் பதிலென்ன?

இப்படி நாம் கேட்கும்போது 'திட்டம் ஏதும் தர வழியற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தார் திட்டுகின்றனர்; கேளாதீர்" என்பார்கள் அமைச்சர்கள். "எங்களுக்கே வாக்கு அளித்தால், இந்தக் குளத்தைக் கடலாக்கி விடுவோம்; அந்த மலையைத் தூளாக்கிவிடுவோம்" என்றெல்லாம் ஆயிரம் ஆசை வார்த்தைகளும் சொல்வார்கள்.

"உங்களுக்கு உணவு கொடுத்தோமே — "ஓட்டு" அளிக்க மறுப்பதேன்?" என்று விந்தையான வினாக்களையும் கிளப்பிடுவர்.

தி. மு. கழகம் ஏற்கனவே சட்டமன்றத்தில் மோட்டார்ப் போக்குவரத்தைத்தேசிய மயமாக்கும் திட்டத்தைக் கிளப்பியது; திரைப்படத் தொழிலை தேசியமயமாக்கும் பணியை மேற்கொள்ளுமாறு சென்னை அரசை வேண்டிற்று; இறைச்சி வணிகத்தையும் மேற்கொள்ளத் தூண்டிற்று. இவற்றின் மூலமாக எண்ணரிய வளங்களைப் பெறமுடியும் என்று, நமது அண்ணா அவர்களும், மற்றவர்களும் ஏற்கனவே சட்டமன்றத்தில் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளாத இந்த அரசு, செய்து முடிக்காத இந்த அரசு, நம்மைப் பார்த்துக் குற்றம் சொல்கிறது; திட்டம் தரவில்லையெனப் பழி தூற்றுகிறது. சரிதானா? இது நல்லோர் நெறிதானா?

அமைச்சர்கள் காட்டும் ஆசை வார்த்தைகள் இடைத்தேர்தல்களின் போது எல்லைக்கோட்டைக் கடந்துவிடுகின்றன. தூத்துக்குடி இடைத்தேர்தலின்போது துறைமுகத்தை விரிவுபடுத்தப்போகின்றோம்; புதிய வசதிகள் பலவற்றைச் சேர்க்கப்போகிறோம் என்று சொற்சிலம்பம் ஆடினார்கள். ஏமாந்த மக்களிடம் இந்தப் பொய்யைச் சொன்னவுடன், அதனை மறந்து விட்டனர். திருவாடானை இடைத்தேர்தலின்போது "தெருவெங்கும் வெளிச்சம் போடுவோம்; ஊரெங்கும் பள்ளிக்கூடம் கட்டுவோம்; போலீசு பயத்தை ஒழிப்போம்" என்றெல்லாம் காமராசர் போன்றவர்களே பேசினார்கள். ஆனால் இன்றுவரை தூத்துக்குடித் துயரம் துடைக்கப்படவுமில்லை; திருவாடானையின் வருத்தம் திருத்தப்படவுமில்லை. இப்படியே இந்த இடைத்தேர்தலிலும் ஆயிரம் ஆசை மொழிகளை அள்ளி வீசுவார்கள். ஆனாலும் வாக்காளர்கள் மயங்காது உண்மைக்கு வாகைசூட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலைகளனைத்தையும் விளக்கி தி. மு. கழகம், தில்லை மக்களே! உங்களிடம் வாக்குக் கேட்கிறது. சிறந்த உழைப்பாளியும், தெரிந்த அரசியல் வாதியும், பொதுநலத் தொண்டரும், கழகத் தோழருமான புலவர் **ஆறுமுகம்** அவர்கள். தி. மு. கழகத்திற்கு உங்கள் வாக்குகளைக் கேட்கிறார். அண்ணாமலையின் மாணவரணி நம் கொள்கையை விளக்கி முழங்கி வரும் பேரொலியும் காதில் விழுகிறது. தில்லையின் தொல்லைகள் ஒழியவேண்டுமானால்—சிதம்பரம் இதம்பெற வேண்டுமானால் உங்கள் வாக்குகளை அவருக்கே அளியுங்கள். கழகத்தோழர்களே! ஏழையர் நாம் இந்தத் தேர்தலில் வெற்றிபெற, உங்கள் உடல் உழைப்போடு பொருளுதவியையும் அனுப்பி விட்டீர்களா? அனுப்பாதார் உடனே அனுப்புக.

மொத்தத்தில்...வாக்காளர்களே! 18-10-59-ம் நாள் நீதியும் அநீதியும் மோதும் நாள்; தொண்டும் பதவியும் போரிடும் நாள்; கழகமும் காங்கிரசும் களத்தில் சந்திக்கும் நாள்.

நீங்கள் யார் பக்கம்...?

★

"கண்" பெற்ற குறட்பாக்கள்

★

"கண்" என்ற வார்த்தை எத்தனை குறள்களில் வந்திருக்கின்றதோ, அத்தனை குறள்களையும் எழுதி அனுப்புக.

இடுக்கண், அவன்கண் என்பன போன்று வந்திருந்தாலும் அவை இந்த வகையில் சேர்க்கப்படலாம்.

— ஆசிரியர்

பாதியில் நின்ற பாட்டு

★

ப. புகழேந்தி

எழுதும்

உண்மைக்

காதல் சித்திரம்!

விரைவில்

"தென்றல்" இதழில்

தொடர்கிறது.

எண்ணமெலாம் கிளர்வதும் கவிஞர்களாலே!

19-வது நூற்றாண்டில் ஆங்கில மொழிக் கவிதைகள் சிறப்பானதொரு இடத்தைப் பிடித்திருந்தன. பாடல்களின் கருத்தும் நயமும் வியக்கத்தக்க வகையில் சிறப்புற இருந்தன. ஆங்கிலப் பேரறிஞர்கள் அந்த நூற்றாண்டை 'கவிதையின் காலம்' என்று அழைத்தனர். அதுபோலவே 20-வது நூற்றாண்டிலும் ஆங்கிலக் கவிதை இலக்கியங்கள் நல்ல இலக்கியங்களாகத் திகழ முடிந்ததா? 20-வது நூற்றாண்டிலும் நல்ல பாடல்கள் பல தோன்றினவா? அல்லது 19-வது நூற்றாண்டு முடிந்தவுடனே, நல்ல கவிதை இலக்கியங்களின் காலம் முடிந்துவிட்டனவா? முதலிய கேள்விகளுக்குப்பல அறிஞர்கள் பலவிதமான பதில்களை அளிக்கின்றனர். ஏ. சி. வார்டு (Ward) என்பவர் "ஆங்கிலக் கவிதை இலக்கியத்தின் கடைசித் தந்தை டென்னிசன். அவன் இறப்புடனே கவிதை இலக்கியமும் செத்துவிட்டது" என்று கூறுகிறார். ஆனால் வார்டின் கருத்தை நாம் அப்படியே ஒப்புக்கொள்வதற்கில்லை. அவர் கருதுவது போல் 20-வது நூற்றாண்டில்கவிதை இலக்கியங்கள் பல தோன்றாமலில்லை. அருமையான பாடல்களும் இனிமையான கவிதைகளும் உள்ளத்தைத் தொடும் பல இலக்கியங்களும் 20-வது நூற்றாண்டில் மிகுதியாக ஆங்கிலக் கவிஞர்களின் பேனாவிலிருந்து புறப்பட்டிருக்கின்றன. கடந்த 50 ஆண்டு காலத்தில் வெளியிடப்பட்டுள்ள கவிதைகளையும் பாடல்களையும் படிப்போர், கவிதைகளின் வளர்ச்சியை அறிந்து கொள்ளமுடியும்.

20-வது நூற்றாண்டில் கவிதையின் வளர்ச்சிக்கு விதை ஊன்றியவர் தாமஸ் ஹார்டி (1904-1908) நெப்போலியனுடன் இங்கிலாந்து நடத்திய போர்களைப்பற்றி தன்னுடைய 'டைனஸ்ட்ஸ்' (The Dynasts) இலக்கியத்தில் குறித்தார் ஹார்டி. இங்கிலாந்து நாட்டை ஆண்டு வந்த விக்டோரியா பேரரசியாருக்குப் பிறகு பிறந்து, உன்னதமான இலக்கியங்களின் வரிசையில் முதன்மையில் வீற்றிருப்பது இந்த 'டைனஸ்ட்ஸ்' தான். அதற்குப் பிறகு, 1911-வது ஆண்டில் 'அழியாத இரக்கம்' ((The everlasting mercy) என்ற ஒரு நூல், ஜான்மேஸ்பீல்டு (John Masefield) என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது. கவிஞர் மேஸ்பீல்டின், இந்த இலக்கியத்திற்கு மாபெரும் வரவேற்பு கிடைத்தது. கவிஞர் மேஸ்பீல்டு கவிதை வளர்ச்சியில் பெரும்பங்குபெற்றவர். உண்மைகளைத் தைரியமாக எடுத்துச் சொன்ன மாபெரும் கவிஞர். அரசர்களுக்கும் அரண்மனை வாசிகளுக்கும் பிரபுக்களுக்கும் படித்தவர்களுக்கும் சொந்தமான கவிதை இலக்கியத்தைப், பாமரமக்களும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு தன் கவிதைகளைத்திரட்டினார். அவருடைய பாடல்களில் கவிதை நயத்தைவிட கருத்துக்களுக்கே முதன்மை இருப்பதை நாம் காணலாம். அவருக்குப்பின் கிப்ளிங் என்றொரு கவிஞர் தோன்றினார். 20-வது நூற்றாண்டில் தோன்றிய பிற கவிஞர்களோடு ஒப்பிடும் பொழுது, கிப்ளிங் அத்துணைத்திறமை பெற்றவர் அல்ல. தன்னுடைய பாடல்களை ஆதிக்க வெறியின் அடிப்படையில் எழுப்பினார் கிப்ளிங். "தன்னாடு பொன்னாடு என்பதை மறவாதீர்" என்று நாட்டுப்பற்றை பலாத்காரத்தின் வழியில் மக்கள் மனதில் ஊற்றத் தன் கவிதைகளை பயன்படுத்தினார். ஆனால் அவர் எதிர்பார்த்த விளைவுகள் அவர் பாடல்களினால் ஏற்பட வழியில்லாமல் போயிற்று. அதற்கு காரணம் அவருடைய கவிதைகள் "கவிதைகளுக்குரிய சிறந்த இலக்கணங்களுடன் அமையாததாலேயே" இந்நிலை என்பர்.

முதல் உலகப் பெரும்போர் தொடங்கியதனால், ஆங்கிலக்கவிதை இலக்கியங்களின் வளர்ச்சி சிறிது தடைப்பட்டது. இலக்கிய அறிஞர்களும், கவிஞர்களும் போரில் தொண்டு செய்வதற்காகப் பல முனைகளில் பணிபுரிந்தனர். அப்படி அவர்கள் போர்ப்பணிகளில் ஈடுபட்டும், சிறந்த சில படைப்புக்களை விட்டுச்சென்றிருக்கின்றனர். போர்க் காலத்தில் தோன்றிய கவிஞர்களுள் தலை சிறந்தவர்கள் ரூபர்ட் புரூக், (Rubert Brooke) வில்பிரட் ஓவன் (WilfredOwen). 1915-ல் மரணமடைந்த புரூக், நாட்டுப் பற்றின் இலக்கணமாகத் திகழ்ந்தவர். இங்கிலாந்து மக்கள் மனதில் தேசீய உணர்ச்சியை, நாட்டுப்பற்றை ஊட்டிய பெருமை புரூக்கைத்தான் சாரும். இங்கிலாந்தின் தேசீயக் கவிஞர் எனப் புகழப்பட்டார் புரூக். உண்மையான கவிஞனின் இதயத்து உணர்ச்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டினார், தனது "பெரிய காதலன்" என்பதில். அவர் எழுதிய 'போர்வீரன்' (Soldier) என்றபாடல் தான் அவர் எழுதிய மற்ற கவிதைகளைவிட சிறந்த வரவேற்பைப் பெற்ற மாபெரும் நூல். யுத்தத்தினால் ஏற்படுகின்ற சீரழிவுகளையும், கொடுமைகளையும், துன்பங்களையும் பற்றியே பெரும்பாலான கவிஞர்கள் பாடினார்கள். ஆனால் புரூக் போரின் மேன்மையைப்பற்றி பாடுகிறார். நாட்டிற்காகத் தன் உயிரை அளிக்கும் போர்வீரனின் புகழைப் பாடுகிறார். நாட்டுப்பற்றையும், வீரச்செயல்களையும் வெளியிட, போர் ஒரு சிறந்த கருவி என்று புகழ்ந்து பாடுகிறார்.



யுத்தத்தில் 1918-ம் ஆண்டு கொல்லப்பட்ட வில்பிரட் ஓவன், யுத்தத்தின் கொடுமைகளையும் சீரழிவுகளையும் தன் கண்களாலே கண்டவராகையால், அதன் தீமைகளைப் பற்றித் தன் கவிதைகளில் வரைந்திருக்கிறார். தன்னுடைய 'கவிதைகள்' என்ற நூலுக்குத் தரப்பட்ட முன்னுரையில் "இந்த நூல் கவிதையைப்பற்றி எழுதப்பட்டதல்ல. இதன் கருத்து போரின் தீமையான விளைவுகளைச் சுற்றிச் சுழல்கிறது" என்று குறிப்பிடுகிறார். போர்க்களத்தில் மக்கள் மாக்களாக்கப்படும் விந்தையையும், கொடுமையின் கோரத் தாண்டவத்தையும் கொலை வெறியோரின் உச்ச நிலையையும் தன்னுடைய "விநோதமான சந்திப்பு" (Strange meeting) என்ற நூலில் விளக்குகிறார். விரோதிகளாக சண்டையிட்டு மடிந்து போன இரு போர்வீரர்கள், யுத்தத்தின் பயங்கர சேதங்களையும் அழுகுரலையும் பற்றி பேசி வருந்தப்படுகின்ற பாணியில் எழுதப்பட்டிருக்கிறது அந்த கவிதை. அதைப் போலவே அமைதியின் தீமைகளை விளக்குகிறார் கிப்ஸன் என்ற கவிஞர். வெறும் பொருளாதார வளர்ச்சிக்காக உயிர்வாழும் இந்த மானிட சமுதாயத்தைக் கண்டு நகைக்கிறார் கிப்ஸன். நாகரீகத்தின் உச்சிக்கிளையில் ஏறிக்கொண்டிருக்கும் இந்த சமுதாயத்தைக் கண்டு எரிந்துவிழுகிறார். பொருளாதாரப் புரட்சி, தொழிற் புரட்சி, முதலியவைகளினால் புதிது புதிதான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தொழிற்சாலைகள் பல ஏற்பட்டன. அதன் விளைவு முதலாளி தொழிலாளி தகராறு, சுரண்டல், தொழிலாளர்களின் வறுமையான வாழ்க்கை முதலிய தீமைகள்; எந்தக் காரியத்தையும் இயந்திரத்தின்மூலமே செய்ய வேண்டிய நிலைக்கும் சமுதாயம் இழுத்துவரப்பட்டது. மனிதனைவிட இயந்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம்கண்டிக்கிறார் கிப்ஸன். "யந்திரம் மனிதனின் எஜமானாகிவிட்டது. மனிதனே! உன்னுடைய உயிர் உடல் அத்தனையும், தினமும் கிடைக்கும் ரொட்டிக்காக இயந்திரத்திற்கு அடிமையாக, அதற்குப்பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறது" என்று, சமுதாயத்தின் அடிமைப்புத்தியை நினைத்துக் கதறுகிறார் கிப்ஸன். 1933-ல் 'கவிதைத் தொகுதிகள்' (Collected pems) என்ற ஒரு நூலை வெளியிட்டு ஆங்கில அறிஞர்களின் மனதில் அழியா இடம் பெற்றார் ஜி. கே. செஸ்ட்டட்டர்ன். இவருடையகவிதைகளில் கேலியும் கிண்டலும் நையாண்டியும் நகைச்சுவையும் அதிகமாக நிறைந்திருக்கும். இதே பாணியைக் கையாண்டவர்கள்தான் பெல்லாக், காம்பல்போன்ற மற்ற கவிஞர்கள். குறிப்பாக காம்பல், தலை சிறந்த சில கவிதைகளை வரைந்ததின் மூலம் கவிஞர்கள் வரிசையில் நல்லதொரு இடத்தில் வீற்றிருக்கிறார். தற்கால இசைக்கு ஏற்றவாறு கவிதைகளை இயற்றியவர் ஈடித். வர்ணிப்பதைவிட உணர்ச்சிகளைத் தூண்டுவதில் நன்றாக இருப்பார் ஈடித். புரட்சிகரமான கவிதைகள் எழுதி, அதன்மூலம் சமுதாயச் சீர்திருத்தத்தை விரும்பியவர் கவிஞர் டி. எஸ். எலியட். அவர் எழுதிய 'வீணான நிலம்' (The waste land) என்ற கவிதை இலக்கியம் ஒரு சிறந்த படைப்பு. சமுதாய் விளக்கத்தைப் புதிய முறையில் கையாண்டு புதுப் பதவுரையை அளித்தார். ஆனால் இந்த 'வீணான நிலத்தை' பாமர மக்களால் அனுபவிக்க முடியாது. கற்றுணர்ந்த மேதைகள்தான் அவருடைய இந்தப் பாடல்களைச் சுவைத்து அனுபவிக்க முடியும். தான் கற்றதை எல்லாம் "வீணான நிலத்"தில் புகுத்தியிருக்கிறார் எலியட். "கம்யூனிசம், சோசியலிசம்போன்ற மறுமலர்ச்சிக் கருத்துக்களின் தூண்டுதலை, இலியட் கவிதைகளில் காணலாம்" என ஆங்கிலப் பேரறிஞர் ஒருவர் கூறுகிறார்-ஸ்பென்டர் சி. டி. லூயிஸ் போன்ற இளங் கவிஞர்கள் எலியட் கவிதைகளை ரசிப்பதற்கு தங்கள் வாழ்நாளை தியாகம் செய்தவர்கள். கவிஞர் ஆடன் (Auden) எலியட்டின் மற்றொரு விசிறி. ஆடன் ஒரு சுதந்திரக் கவி. "எலியட்டிடமிருந்து நிறையக் கற்றுக்கொண்டவர் ஆடன்தான்" என்று ஐபர் இவான்ஸ் (Ifor Ivans) என்பவர் கூறுகிறார். ஸ்பெயினில் நடந்த உள்நாட்டுப் போரைப்பற்றி அவர் எழுதிய 'ஸ்பெயின்' ஒரு நல்ல வரலாற்றைச் சொல்வது. எனவே மேற்கூறிய கவிஞர்களின் படைப்புக்களை நாம் ஆராயும்பொழுது, 20-ம் நூற்றாண்டும் கவிதை வளர்ச்சிக்கு நல்லதொரு உதவி செய்துள்ளது என்பது தெரிய வருகிறது.

-வீரமாமுனிவர்.

துறந்திடு துறவை!

அன்றலர் அடுக்கு மல்லி, அழகுறப் பறித்து நல்ல
தென்றமிழ் நிலத்து வாழைச் செந்நாரெடுத்துக் காந்தள்
தென்றலில் அசைதல் போல(ச்)செவ்விரல் தொடுக்கக் கண்டால்
குன்றனைத் தோளன் கூடக் குழலிசைக் கரவ மாவான்.

கொழுநனின் வரவை எண்ணிக் கொண்டலாய் எழுந்து நோக்கி
விழுமியப் பணியைத் தேர்ந்து வீழ்கடல் அலையாய் வீழும்
செழுமிள நீர்கள் காட்டும் செவ்வரி எழிலைக் கண்டால்,
பழுதெனத் துறவு தோன்றும்; பறித்திடும் மனதை இன்பம்.

கதிரொளி மறைக்குங் கண்ணாள் காவிரி மூழ்கி வந்து
பொதியையில் பிறந்து தோனறும் புதுமணத் தென்றற் காற்றில்
சதிரிடு விரலாற் கோதி சரிகுழல் சொருகக் கண்டால்,
நிதியொடு உயிரும் ஈய நினைந்திலர் மனிதர் தாமோ?

தெள்ளிய மழலை பேசி(த்) தென்றமிழ்க் கினிமை சேர்ப்பாள்,
வெள்ளரி விதைகள் வாயில் விளங்கிடல் மறைக்க எண்ணங்
கொள்ளிரு இதழ்கள் கூடும் கடையெழுங் குழியைக் கண்டால்,
தள்ளிடு நினைவு தோன்றி தளிருடல் விலக்கல் உண்டோ?

நறுமலர் மலர்ந்த நல்ல நறுமணங் கமழுங் கொம்பு
சிறுமலர் அடிகள் பாட சிலம்புகள் இசையைக் கூட்ட
புறவெளி நடக்குந் தோற்றம் புகுந்திட இலையோ நெஞ்சில்
துறவிடை மனமும் ஏனோ? துறந்திடு துறவைத் தோழா!

—"சுரன்"

தொல்காப்பியச்சுவை!

15. மரபியலுள் பொருந்துமா?

இராம. இராமநாதன்
பி.ஏ. (ஆனர்சு)

தலைப்பைக் கண்டவுடன் நுனிப்புல் மேய்ந்தவனே என்று எண்ணுவர் சிலர். உண்மையில் மரபியலைக் கற்றுப் பலமுறைகள் சிந்தித்த பின்னரே, என் கருத்தினைத் "தென்ற"லில் தீட்டுகின்றேன். என் கருத்துக் கோவையில் ஒளிக்கீற்றுத் தென்பட்ட அளவே எழுதுகின்றேன். இதற்கேற்ற விளக்கம் தரக்கூடிய விற்பன்னர்கள் விடையாகத் தருமாறு விழைகின்றேன்.

"மேற்கிளந் தெடுத்த
யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்தின்
செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை
உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த
ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத்
துணைமை எய்தி
அளக்கல் ஆகா
அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும்
பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென
யாத்தனர் புலவர்"
(தொல்-இளம்.646)

ஒரு நூற்கு அங்கமாகிய சூத்திரத்திற்கு இலக்கணம் மேலே உரைத்துள்ளார். இது மரபியலுள் காணப்படுகின்றது. இதன் பொருளை ஒரு முறை சிந்திக்க வேண்டும். சுருக்கமாகக் கூறுகிறேன். "சில எழுத்துக்களால் செய்யுள் வடிவில் வர வேண்டும். உரைகாண்கையில் அவ்வுரையில் பொருள் எல்லாம் தன்னகத்தே பெறவேண்டும். நுண்ணிய பொருள்களைப் பெற்று பல முகத்தானும் பொருள் கொள்ள அமைதல் வேண்டும். ஆராய்ந்தால் வரையறைக்குட்படாத வகையில் அரிய பொருளை உடையதாயும் இருத்தல் வேண்டும்". இதனைப் படிக்கும் பொழுது சிறப்பாகவும், சிந்தனைக்கு உரியதாகவும் காணப்படுகிறது. தொல்காப்பியத்திற் காணப்படும் எந்தச் சூத்திரமும் இவ்வளவு கடுமையாகக் காணப்படவில்லை.

மேலும் மரபியலுக்கு முன் கூறப்பெற்ற செய்யுளியலில், முறையாகச் சூத்திரம் என்பது என்ன? எப்படி அமைந்திருக்க வேண்டும்? என்ற விதி முறையைக் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

"அவற்றுள்,
சூத்திரம் தானே
ஆடி நிழலின்
அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப்
பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற
யாத்தமைப் பதுவே"
(தொல்-இளம். 471.)

தொல்காப்பியர் சூத்திரத்தின் பொருளை நன்கு விளங்கும் வகையில் யாத்துள்ளார். சூத்திரம் என்பது என்ன?

"உனக்குக் கண்ணுடி தெரியுமா?"

"தெரியும்"

'கண்ணுடியில் பார்க்கும் பொழுது..."

"என் உருவம் எளிதாய்ப் புலப்படும்"

"அதுபோல் செய்யுள் நடையில் வருவது சூத்திரம்"

சூத்திரத்தின் கருத்தைப் படித்த உடனேயே பொருள் விளங்குமாம் நம் உருவத்தைக் கண்ணுடியிலே கண்டவுடன் தெரிவதைப்போல. அதனைப் பிறர் கூருமலே அறிவதைப் போல விளங்குமாம். "ஆடி நிழலின் அறியத் தோன்றுவது" என்ருல் சூத்திரத்தைப் படித்த அளவிலேயே அதனுல் பெறப்படும் பொருள் மனதில்படுதல். "நாடுதல் இன்றிப் பொருள் நனி விளங்க யாத்தல்" என்றதால், "சூத்திரம்" என்றவுடன் தமிழ்ப் புலவரை, "டாக்டரை" அழைக்க வேண்டும் என்று எண்ணுதே! அவ்வாறு எண்ணிஞல் அறியாமையே தவிர, அது சூத்திரமும் இல்லை என்பது அவர் கருத்துப் போலும். பிறர் விளக்காமல், விளக்க வேண்டிய தொல்லை இல்லாமல், எல்லோரும் அறியும் வகையில் செய்யுளில் யாப்பதே சூத்திரம் எனப்படும்.

இவ்வாறு எளிமையான நிலை படைத்த சூத்திரம் செய்யுளியலில் காணப்படவும், மரபியலில் "நுண்மை ஒண்மை, துளக்கல் ஆகாத்தன்மை" எவ்வாறு பெற்றது?

பேராசிரியர் இளம்பூரணர் உரை எழுத முற்பட்டவர் செய்யுளியலில் காட்டாகக் கூறும் சூத்திரம்:

"வேற்றுமை தாமே
ஏழெனமொழிய
விளிகொள் வதன்கண்
விளியோ டெட்டே"
(தொல்-வேற்-1.)

இதன் பொருளும் கண்ணுடியிற் காண்பதுபோல் காணப்படுகின்றது. ஆனல் இளம்பூரணரே மரபியலுள் காணப்படும் சூத்திரத்திற்குப் பொருளும் எழுதி, இறுதியில் "என்பதூஉம் இதற்கிலக்கணம்" என்று குறித்துள்ளார்கள். மரபியலுள் காணப்பெறும் இச்சூத்திரம் கூறும் செய்தி செய்யுளியற் செய்தியோடு பொருந்துமா? என்பதே ஐயமாய் உள்ளது. ஏதேனும் ஒன்றைக் கொள்வதே எல்லா மக்களுக்கும் எளிதாய் இருக்கும் என்று கருதுகின்றேன்.

647-ம் சூத்திரமாய்க் காணப்பெறும் சூத்திரம்:

"பழிப்பில் சூத்திரம்
பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது
காண்டிகை யாகும்"

என்ற ஆசிரியர், 649-ம் சூத்திரமாய்க் கூறுவது.

"சூத்திரத் துட்பொரு
ளன்றியும் யாப்புற
இன்றி யமையா
தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்ப
துரையெனப் படுமே"

என்கிருர். இது 647-ம் சூத்திரத்திற்குப் பொருந்தவில்லைபோல் புலப்படுகின்றதே. ஒருவேளை இதுவே விருத்தியாகப் பிற்காலத்தே பிறந்தது என்று கூறலாம். இதுவும் மரபியலுட் காணப்படும் சூத்திரம், எந்த வகையில் பொருந்தும்? என்பதை அறியமுடியவில்லை.

மரபியலுட் கூறப்படும் சில செய்திகளைப் பிற்காலத்து வந்தோர் எழுதிச் சேர்த்துவிட்டார்கள் என்று நாவலர், சணக்காயர் பாரதியார் போன்ற அறிஞர் கூறுகின்றனர் ஆனல் இந்த முறையில் முன்னுக்குப் பின் முரண்பட்ட நிலை வருதற்குரிய வளமான விளக்கம் புலப்படவில்லையே! உரை வகுத்த பெருமக்கள், முன்னேர் மொழியைப் பொன்னே போற்போற்றி, மறுமொழி கூருமற் சென்றுவிட்டார்கள்.

முதல் நூலைச் சொல்லும்பொழுது பிறர் கருத்தினையோ, நூலினையோ ஒட்டிக் கூருமல், சொந்தமாக எழுதும் நூல் முதல்நூல் என்ற அளவு புலப்படும் மக்கள் உண்டு. ஆனல் 640 ஆம் சூத்திரத்தில் மனிதனே நூல் இயற்ற ஒல்லுமோ? என்ற ஐயத்தை எழுப்புகின்றது!

"வினையின் நீங்கி
விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது
முதனூ லாகும்."
(தொல்-இளம். 640)

நல்வினை தீவினை ஆகிய வினைகளை நீக்கியவன்-அனைத்தையும் உணரும் அறிவாற்றல் உடையவன் "முனைவன்" ஆகும். இவன்தான் நூலை இயற்றமுடியும் அது மட்டும்தான் முதல்நூல் என்ருல், இயல்புடைய மக்கள் எழுதும் புதிய கருத்துடைய நூல்கள் எல்லாம் முதல் நூல்கள் அல்லனவா? நல்ல செயலையும் செய்யக்கூடாது; தீயசெயலையும் செய்யக்கூடாது. இந்த நிலையுடையவன் மனிதனுகவே இருக்கமுடியுமா? அவன் மனித உணர்ச்சிக்கு அப்பாற் பட்ட, மனிதனே அல்லாத இயற்கைக்கு இகந்த ஒன்ருகவே இருக்க முடியும். இந்தச் சூத்திரத்திற்கு நச்சினுர்க்கினியர் உரையைக் கொண்டே மேற்கண்ட கருத்து "பொருந்தாது" என்று முடிவுக்கு வரத் துணை செய்தது.

உரையாசிரியர்கள் வழிகாட்டி வழியிற் சென்று விழியிற்படாது வி பட்ட செய்திகள் மயக்கத்தை எழுப் கின்றன. விடுபடவும், விடைபெறவ வாய்ப்பினை நாடுகின்றேன்.

★

அடுத்த கிழமை—
தொல்காப்பியத்தில்:
"செய்யுளியலின் சிறப்பு"

"கல்வி"

ஆங்கிலம் எளிய தமிழ் விளக்கத்துடன் எழுதவும், படிக்கவும், பேசவும், ஒரே வருடத்தில் தபால் மூலம், கற்றுக்கொடுக்கப்படும்.

மாதம் ரு. 2. விபரங்கள் இலவசம்.

தி நியூ கல்வி அசோசியேசன்,
திருப்பூர்.
(கோவை மாவட்டம்)

என் தோள் பிரியார்- நின்ற சொல்லர்; நெஞ்சத்தினியர்.

நம்பிக்கை என்பது இரண்டு உள்ளங்களுக்கும் இடையே ஏற்படும் நிச்சயமான எண்ணம். இரண்டு உள்ளங்களும், ஆணாயினும் பெண்ணாயினும் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொண்ட பிறகு-அவ்வுள்ளங்கள் பல நாள் பழகிய பிறகு-அப்பழக்கத்தின் வாயிலாக அவ்வவ் உள்ளங்களின் திட்பத்தைக் கண்டுள்ள இவ்விருவரில் ஒருவரைப் பற்றி மற்றொருவரிடத்தில் யாராவது வந்து மாறாகக் கூறின், அம்மாறு பாட்டைக் கேட்டவர், தாம் கண்டு உணர்ந்த அவ்வுள்ளத்தைப்பற்றி, அவர் தவறாகக் கூற வந்திருப்பதை அறிந்து, "அவ்வுள்ளத்தைப்பற்றி நீ அறிந்தது அவ்வளவுதான். உனக்கென்ன தெரியும்? ஏதோ தெரிந்தவாறு கூற வந்துவிட்டாய்" என்று எள்ளி உரைப்பர்.

இதுதான் ஓர் உள்ளம் மற்றோர் உள்ளத்தின் பால் வைத்திருக்கும் பற்று அல்லது நம்பிக்கையாகும். இதுபோன்ற ஒரு திட்பமான நம்பிக்கையை சங்ககாலக் கவிதைகளில் காணலாம். பழைய அகத்துறைப் பாடல்களில் காதல் வரலாறுகளைக் கூறும்போது, அக்காதல் வரலாறுகளில் தோன்றும் தலைவன் தலைவி உள்ளங்களைப்பற்றிப் படம் பிடித்துக் காட்டும்போதுதான் காதல்கொண்ட தலைவனிடத்தில் தலைவிக்கு உள்ள அன்பையும் பற்றையும் - அங்ஙனமே தலைவனுக்குத் தலைவி மாட்டு உள்ள அன்பையும் பிணைப்பையும் தெரிவிக்கும்போது, நம்பிக்கையின் விரிவான பொருள் நமக்குத் தெற்றெனப் புலப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் காதல் தத்துவங்களை மிகச் சிறந்த முறையில் பல புலவர்கள் விளக்கியுள்ளனர். காதல் தத்துவத்தின் பண்பும் மேன்மையும் எண்ணி எண்ணி வியக்கத்தக்க முறையில், சங்க இலக்கியங்களில் அமைந்து இருக்கின்றன. இந் நாகரிக உலகில் 1959-ல் உள்ள காதல் நிகழ்ச்சிகள் அக்காலப் பண்பாட்டின் உச்சநிலையை எட்டிப் பிடிக்கவே இயலவில்லை. ஆரியப் பண்பாட்டின் கலப்பால் தசை நாகரிகமும் பண பலமும், சாதிக் கோளாறும் ஆகிய சிக்கல்கள், உண்மைக் காதலின் தத்துவ முறையை மறைத்தே விட்டன. மறைக்கப்பட்ட அந்தத் தத்துவங்கள் மீண்டும் ஒளி பெறவும், இக்கால ஆடவர் பெண்டிர் உள்ளங்கள் பிணக்கற்று மகிழ்ந்து நணி நாகரிக மக்களாய் வாழ, பழைய இலக்கியங்களைக் கண்டு மகிழ்தல் நலம் பயக்கும்.

ஒரு தலைவன் தலைவியைப் பற்றி- அவர்கள் கொண்ட காதலைப்பற்றி நற்றிணையிலே ஒரு அழகான விளக்கம் காணலாம். அந்நூலின் முதற் பாட்டிலே ஆசிரியர் கபிலர், காதற் பெருமையையும் ஆழத்தையும் நமக்கு நன்கு விளக்குகிறார்.

ஆசிரியர் குறிஞ்சி நிலக்காட்சியை நம் கண்முன் கொண்டு வருகிறார். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி யென்பர். அம்மலை சார்ந்த இடத்தில் சந்தனமரங்கள் அடர்ந்திருக்கின்றன. அம்மரங்கள் அடர்ந்த பகுதியின் அருகே, அழகிய தாமரைக்குளமும் இருக்கிறது. அக்குளத்தின் தாமரைப் பூக்களில் உள்ள தேனை, தேனீக்கள் சந்தனமரத்தில் கொண்டுபோய்க் கூடுகட்டிச் சேர்த்து வைக்கின்றன. இவ்வழகிய குளமும் சந்தனமரங்களும் உள்ள இடத்தில் ஒரு தலைவனும் தலைவியும் அன்பினால் பிணைக்கப்பட்டுக் காதல் கொள்கின்றனர். அவர்களது காதல் ஒழுக்கம் மிக உயர்ந்ததாயும் விழுமியதாயும் அமைகின்றது. இவர்கள் முதலில் களவொழுக்கத்தில் நின்றபோது, தலைவன் தலைவியைப் பார்த்து, 'நான் உன்னைப் பிரியேன், பிரியின் இவ்வுலகில் ஒரு கணமும் உயிர் தரியேன்' எனப் பலமுறை சொல்லியுள்ளான், என்று தலைவி கூறுகிறாள். அவன் சொன்ன சொல்லை காற்றிலே பறக்கவிடவில்லை. ஆனால் கடமையின் காரணமாக பலமுறை தலைவியைப் பிரிய நேர்ந்தது. தலைவனது பிரிவை ஆற்றாது தலைவி வருந்தி இருக்கிறாள் பலமுறை. அத்தலைவன் தான் சொன்ன சொல்லைப் போற்றிக் காத்து வந்துள்ளான் பலமுறை.

ஒருமுறை அத்தலைவன் தலைவியின் தோள்களைத் தன்மீது சாய்த்துக் கொண்டு அவளது அழகைப் பருகுகிறான். அவளது (அத்தலைவியின்) அங்கங்களின் அழகைப் போற்றியும் விளக்கியும், அவளிடம் கூறிப், பெருமை அடைவதிலே, அவனுக்கு ஒரு தனி இன்பம் உண்டு. ஒரு நாள் அத்தலைவன் தலைவியின் நெற்றி அழகின் பெருமை பற்றிப் போற்றிப் புகழ்கிறான். தான் தலைவியை நோக்குங்கால், தலைவி தன்னை நோக்கி மெல்ல நகும்போது, அந்நெற்றியில் படர்ந்து ஒளிவீசும் மின்னல் ஒளியைப் பற்றி, அவளிடம் பெருமையாகக் கூறி இருக்கிறான். இப்படி இவர்கள் இன்பத்தில் திளைத்து நிற்குங்காலை, தோழி வந்து தலைவியிடம், "அம்மா, நும் காதலர் நும்மை விட்டுப் பிரியப்போகிறார்" என்று கூறுகிறாள்.

இதனைக் கேட்ட தலைவியின் உள்ளம் நடுங்கிவிட்டது. பிரிவுத் துயரத்தை, தலைவி களவொழுக்கத்தில் பலமுறை நன்கு அனுபவப்பட்டிருக்கிறாள். ஆகவே தோழி கூற்றுக்கு முதலில் அச்சம் உடையவளாகி, மீண்டும் தலைவனது பண்பை நினைந்து தோழியின் கூற்றை மறுத்து நகைக்கிறாள்.

"தோழி நீ பிச்சி ஆயினை. நம் காதலர், நிலைமை தவறாத வாய்மை உடையவர்; யான் நோக்கிய போதெல்லாம் எனக்கு இனியராய் என்னை மகிழ்விப்பார். அந்த மகிழ்ச்சிக்குத் துன்பம் நேரிடும்படி என் தோள்களை விட்டுப் பிரிகின்ற குணக் குறைபாடு இல்லாதவர்; அத்தகைய மேன்மையுடையாருடைய நட்பு எப்படிப்பட்டது தெரியுமா? நீர் இல்லாது உலகம் இல்லையாம்போல, அவர் இல்லாது எனக்கு இனிமை இல்லை. அப்படிப்பட்ட உயர்ந்த தலைவனை நான் அடைந்ததாலே எனது இனிமை மேலும் மணமுடையதாகியும் விளங்குகின்றது. அது எதைப்போல் தெரியுமா? தாமரைப் பூவிலே உள்ள தேனைச் சந்தன மரத்திலே கூடு கட்டியதைப் போன்றது. அதுமட்டுமா தோழி, என் அழகினையே எப்பொழுதும் பருகி நிற்கும் அவர், அதுவும் என் நெற்றியின் அழகைப் புகழ்ந்து பேசியுள்ள அவர், இப்பொழுது தம் பிரிவால் என் நெற்றியில் பசலை படிந்துவிடும் என்பதை அறியாதவரா? அவர் அதனை அறியாதவர் போன்று-என் தலைவன் பிரியப் போகிறான் என்று கூற வந்துவிட்டாய்-நன்றே சொன்னாய்" என்று கூறுகிறாள்.

இத்தகைய சிறந்த நிலையைக், கபிலர் வாய்மொழியின் வாயிலாகவே பார்ப்போம்.

"நின்ற சொல்லர்
நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள்
பிரிவுஅறி யலரே;
தாமரைத் தண்தாது
ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த
தீந்தேன் போலப்
புரைய மன்ற
புரையோர் கேண்மை;
நீர்இன்று அமையா
உலகம் போலத்
தம்இன்று அமையா
நம்நயந்து அருளி
நறுநுதல் பசத்தல்
அஞ்சிச்
சிறுமை உறுபவோ
செய்புஅறி யலரே?"

(நற்றிணை-1)

இப்பாடலில் எடுத்த எடுப்பிலேயே தலைவனைப்பற்றி "நின்ற சொல்லர்" என்று குறிப்பிடுகிறாள் தலைவி. தலைவனைப்பற்றி, அவனது காதலைப் பற்றி, அவன் தன் மாட்டு வைத்திருக்கும் உறுதியான அன்பைப்பற்றி, அவன் சொன்ன சொல் தவறாமை பற்றி, அவ்வளவு அழுத்தமான நம்பிக்கை தலைவிக்கு. இவ்வளவு உறுதியாகத் தலைவனது உள்ளத்தைத் தலைவி புரிந்துகொண்டிருக்கிறாள். மேலும் ஆசிரியர் கூறும் உவமை நயமோ, நினைந்து நினைந்து இன்புறுதற்கு உரியதாம்.

தலைவன் உயர்குடியில் பிறந்தவன்-தலைவியோ சேற்றிலே முளைத்தவள்-சேற்றில் பிறக்கும் எல்லாப் பூக்களும் தாமரையாகி விடாது- எல்லாத் தேனும் தாமரைத் தேன் ஆகிவிடாது. சேற்றில் பிறந்ததாயினும், பண்பால் உயர்வடைந்தது தாமரை. அப்பண்புடைப் பொருளில் உள்ளது தேன். ஆகவே, உயர்குடித் தலைவன் தலைவி நட்பிற்குச் சந்தன மரத்தில் வைத்துள்ள தாமரைத் தேன் உவமையாக வந்து நட்பின் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

தாமரையில் பிறந்த தேன் சந்தன மரத்தில் சேர்ப்பிக்கப்படுகிறது. தலைவனது நட்பின் உயர்வுக்குச் சந்தன மரமும் - தலைவியினுடைய உளப் பண்பிற்குத் தாமரைத் தேனும் உவமையாக வந்து கவிதைத் திறத்தை மிக உயர்த்தியுள. இப்படிப்பட்ட உயர்ந்த காதற் சக்திகளையும்- தத்துவங்களையும் கூறும் கவிதைகள் பல உலக மொழிகளில், வேறு எங்ஙனும் காண இயலாது என்பது அறிஞர் கண்ட உண்மை. இங்கு உயர்குடி என்பது பண்பின் சிறப்பே அல்லால் பிறிதொன்றில்லை.

-சிறுவை. ந. இனியன்.

தென்னகத்தின் வளம்

தஞ்சை மாவட்டக் கடற்கரைப் பகுதியிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் பாக்ஸ் சலசந்திவரை உள்ள கடற்கரைப் பகுதிகளிலும் பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கலாம் என்ற எண்ணத்தின்மீது அவற்றைக் கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நிலக்கரிப் படிவ வயல்களையும், தண்ணீர் நில ஊற்றுக்களையும் கண்டுபிடிக்க வடக்கே காவிரி ஆற்று டெல்டாப் பகுதியிலிருந்து தெற்கே பாக்ஸ் சலசந்திவரையுள்ள சுமார் 3,000 சதுரக் கற்கள் வட்டாரத்தில் "சர்வே" நடைபெற்று வருகிறது.

காவிரி ஆற்றுக்குத் தெற்கிலுள்ள ஆற்றுப் படுகை வட்டாரத்தில் 300 சதுரக் கற்கள் பிரதேசத்தில் விவரமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு முடிந்துவிட்டன.

ஆடலும் பாடலும் அவர்தம் சொத்து-

அவையே தமிழ்க் கலையின் வித்து.

“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே” முன் தோன்றிய குடி மூவேந்தர் குடி-நம் பழந்தமிழ்க்குடி. இக்குடிப் பிறந்த தமிழ்மக்கள் மிக்க பழம் மக்கள். இயேசு கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே பாரினில் சிறந்து விளங்கினர். உலகத்தில் இவர்கள் வாணிபம் செய்யாத இடமே இல்லை. இவர்கள் புகழ் பரவாத நாடே இல்லை.

இவர்கள் தமக்கெனத் தனிப் பண்பும் நாகரிகமும் கொண்டவர்கள். தனியான இனிமையான மொழி பேசும் ஆற்றலுடையவர்கள். வாழ்க்கை வாழ்வதற்கே எனத் தனி இலக்கணமமைத்துத் திறம்பட இன்பமான வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள். இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த தமிழர்கள் வாழ்வில், சமபங்கேற்று வாழ்ந்து வந்தனர் பாணர்கள் எனும் ஒரு சிறு பிரிவினர்.

இவர்கள் எக்காலத்து வதிந்தவரெனின், பொதுவாகக் காலத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம் முதற்பிரிவான சங்ககாலமானது சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலமாகும். இடைக்காலம் கி. பி. 7-வது நூற்றாண்டு முதல் 13-வது நூற்றாண்டுவரை. கடைக்காலம் 14-வது நூற்றாண்டு முதல் ஆரம்பமாகிறது. இனி முற்சொன்ன சங்க காலத்தையே இரு கூறாகப் பிரிக்கலாம். முற்பாதியில் பௌத்த சமயம் தமிழகத்திற்குள் தலை காட்டவில்லை. பிற்பாதில் தான் பௌத்த சமயம் பரவத் தொடங்கியது. அஃது கிறித்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். இதற்குமுன்னர் தமிழகத்தில் தமிழ் மொழி தனிச் சிறப்புடனும் தனித்த தன்மையுடனும் தனியாட்சி புரிந்து வந்தது.

எனவே பாணர்கள் என்போர் சங்க காலத்தைச் சார்ந்தவர்கள். சங்கீதக் கலைகளை ஐயந்திரிபறக் கற்றவர்கள். கலையுணர்ச்சியே உருவானவர்கள். எனினும் ஏழைகள். இவர்களுக்கெனத் தனி வீடு வாசல்களில்லை. இவர்கள் தத்தம் இல்லக் கிழத்தியுடனும் இசைக் கருவிகளுடனும், ஒவ்வொரு குறுநில மன்னனிடமும் செல்வார்கள். அம்மன்னன் கடைப்பிடிக்கும் கொள்கைகள், நடாத்திவரும் ஆட்சிமுறை, பழகி வரும் பண்பு, குடிகளைக் காக்கும் காவல், நாட்டைப் பேணி வரும் முறை, கொடைத்திறம், போர்த் திறம், அவன் அவையை நிரப்பியிருக்கும் அமைச்சர்கள், புலவர்கள் ஆகியோர்களின் ஆற்றல் ஆகியவற்றைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று பகிர்ந்துண்டு மகிழ்வர். ஆனால் பாணன் பாடுவான். பாடினி பாடாள். அவள் ஆடுவாள். யாழ் எடுத்து மீட்டாள். நடனமே ஆடுவாள்.

தவிரவும், இப்பாணர்கள் புறவாழ்வில் மட்டுமின்றி, நாட்டு மக்களின் அகவாழ்விலும் ஒன்றிக் கலந்து உறுபகையை மாற்றி, பெருமகிழ்ச்சியை வாழ்க்கையில் ஏற்படுத்தி வந்தனர். என்னெனில், பழந் தமிழகத்தில் காதல் வாழ்க்கையில் இடையூறு இல்லாமல் இனிது முடிந்த முழு வாழ்க்கை இல்லை. எப்படித்தான் எச்சரிக்கையாய் வாழ்க்கை எனும் படகை ஓட்டிச் சென்றாலும் இடையிடையே புயல் வீசி இன்னல் ஏற்படுத்தாமலில்லை. பழந் தமிழ் மக்கள் நாகரிகத்தில் மேம்பட்டு விளங்கிய காரணத்தால், இல்லறத்தில் இடுக்கண் ஏற்பட்ட காலத்து, இந்த ஊடலைப் பாணர்களின் பாடலே தீர்த்து வைத்த சேதியினை சங்க இலக்கியங்களில் பரக்கக் காணலாம். எனவேதான் பாணர்களை அரசனின் அந்தப்புரம்வரை செல்ல அனுமதித்தனர் அக்காலத்தில். விழாக் காலங்களில் அரச அவையில் பாணன் யாழ் மீட்டிப் பாடுவதும் பாடினி ஆடுவதும் வழக்கமாயிருந்து வந்தது. அக்கால வாழ்க்கை, இக்கால வாழ்க்கை போன்றஅடிமை வாழ்க்கையல்ல. மாறாக, அக்கால நாகரிக நாடுகளான ரோம், எகிப்து முதலான நாடுகளின்வாழ்க்கையைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்பாக அமைந்து இருந்தது. பண்புடன் பழகி வந்தனர். அன்புடன் அயலவரை அணுகி வந்தனர். அறிவிற் சிறந்து விளங்கினர்.

ஒரு அரச சபையில் அனைவரும் நிறைந்திருந்து, அனைத்தும் குறைவற இருந்த போதிலும்கூட, அவ்வவையில் பாணர்கள் இல்லையேல் அந்த அவையில் அழகு மிளிராது. கண்ணால் கண்டால் கவின்மிகு தோற்றமிருக்காது. காரணம்அவ்வளவு இன்றியமையாமை பெற்றிருந்தார்கள் இந்தப் பாணர்கள். அரசர்கள் போருக்குச் சென்று வெற்றியுடன் திரும்பிய போதும், வேட்டைக்குச் சென்று திரும்பியபோதும், பாணர்கள் அவர்கள் முன்னிலையில் யாழ்மீட்டி, நற்றமிழிசைக் கருத்துக்களடங்கிய இன்னிசை வழங்கி அன்னாருக்கு உற்சாகமும் ஊக்கமும் ஊட்டுவார்கள். அரசர்கள் தாம் மகிழ்ச்சியடைந்ததின் அறிகுறியாகப் பொன்னால் செய்த தாமரையையும், மாலையையும் பரிசளிப்பர். எனவே பாணனுக்கும் பாடினிக்கும் அரசவையில் சமத்துவமும் நன்மதிப்பும் இருந்து வந்தன. இவர்களது கலைக்கும் தொழிலுக்கும் மதிப்பிருந்து வந்தது. இவர்கள்மேல் ஏற்பட்ட அன்பின் காரணமாக, மன்னர்கள் எல்லா வசதிகளையும் இவர்களுக்குச் செய்து கொடுத்து, இவர்கள் இங்கேயே இருக்கவேண்டும், வேற்றிடம் செல்ல வேண்டாம் என விரும்பிக் கேட்டுக் கொண்டாலும், இவர்கள் அந்த அன்புக் கட்டளையை மறுத்துவிடுவர். ஏனெனில், இவர்கள் ஊர்களுக்கு வெளியே, தனியே, இயற்கை வளப்பமுள்ள இடங்களில்தான் வாசஞ் செய்வர். இபற்கையோடியைந்த தனி வாழ்க்கையே இவர்களுக்கும் இவர்கள் இல்லறத்துக்கும் இன்பம் பயப்பதாயிற்று.

இத்தகைய பாணர்கள் தாங்கள் செல்லும் வழிநெடுக தங்களினத்தவரை ஒருவரையொருவர் சந்திப்பர். சந்தித்த அவர்கள் தான் சென்றுவந்த நாட்டின் வளப்பத்தையும், அந்நாட்டில் வதியும் குடிகளையும், அக்குடிகளைக் காக்கும் கொற்றவனையும், அக்கொற்றவனின் கொடைத் திறத்தையும், இதுவரை தன் இல்லக் கிழத்தியுடன் இன்பமாக நடந்து கடந்துவந்த தூரத்தையும், இதன் இடைப்பட்ட வயல் வெளிகளையும் வண்ணப் பூஞ்சோலைகளையும், இன்ன பிற இயற்கைக் காட்சிகளையும் கொண்டுவந்து அவர்தம் கண் முன்னேநிறுத்துவதுபோற் கூறி, நீ அங்கு செல்லின் உனக்கும் அந்த வள்ளல் நிறையப் பரிசளிப்பான் என்பதைக் கூறி, அவ்வள்ளல் இருக்கும் இடத்துக்கு வழியும் கூறுவான். இப்பாணன் செல்லும் வழியே பாடினியும் உடன்செல்லுவாள். இவ[illegible] கற்பிற் சிறந்தவள். குறிப்பறி[illegible] நடப்பவள். நேர்மை தவறா நேரி[illegible]யாள். சீரிய கொள்கையுடையவ[illegible] மறக்குடிமகள். கற்புடைப் பெண்ணாள் என்பதற்கறிகுறியாக நல்ல முல்லை மலரை தன் தலையில் சூடியிருப்பாள்.

எனவே நாட்டியக்கலை அக்காலத்தில் விலைமாதருக்குரிய கலையாக ஆகாமல், ஆட்படாமல் மாறாக, கற்புடைப் பெண்களுக்கே உரித்தான தனிக் கலையாக மிளிர்ந்தது. தமிழ்க் கலையின் புகழ் தரணியெங்கும் ஓங்கியது.

-கே. குட்டுவஞ்சேரல்.

உடையிலும் வேறுபாடு-
அவராலும் மறைக்க முடியவில்லை!

★

“காந்தியடிகள் லண்டலிருந்து பம்பாய் வந்திறங்கிய காட்சியைத் தொகுத்தனர். காந்தியடிகள் கப்பலை விட்டிறங்கியதும் கூட்டம் இருக்கவேண்டுமல்லவா? வரிசைப்படுத்தி இலக்கமிட்டுள்ள, கூட்டங்கள் என்ற தனிப் பிரிவில் பல பிலிம்கள் இருந்தன. அவற்றில் ஒன்றை எடுத்து இணைத்தார்கள். பிறகு படத்தைத் திரையிட்டுப் பார்த்ததில், அந்தக் கூட்டம் சென்னையில் நடந்த கூட்டம். பிறகு பம்பாய்க் கூட்டத்தின் சரியான பிலிமை எடுத்துக்கொடுத்தேன்.

அப்பொழுது படத் தொகுப்பாளரிடம், “அமெரிக்காவில் லாஸ்ஏஞ்சல்சுக்கும் நியூயார்க்குக்கும் உள்ள தூரம் மூவாயிரத்து இருநூறு மைல். அந்த இரண்டு நகரங்களில் எந்தப் பெருங்கூட்டத்தைப் படம் பிடித்தாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அமெரிக்க நாட்டில் எந்த ஸ்டேட்டில் படம் பிடித்தாலும் அவ்வாறே இருக்கும். ஆனால் இந்தியாவில் ஒவ்வொரு ராஜ்யத்திலும் வெவ்வேறு விதமான உடைகள் அணிவார்கள்”! என்றேன்.”

—இவ்வாறு திரு. ஏ. கே. செட்டியார் தமது “அமெரிக்க நாட்டில்...” எனும் நூலில் 181-ம்பக்கத்தில் எழுதுகிறார். இவ்வாறு இங்கு மட்டும் உடையில் பல வேறுபாடுகள் இருப்பது ஏன்? ஏன்?

நூல் நயம்

— செல்லையா —

★

மயிலாடும் பாறை

சாலை வழியில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் உள்ள தொடர்புகள் சில நேரங்களில் குறிப்பிடத்தக்கனவாய் அமைந்துவிடுகின்றன.

"நினைத்தற்குரிய பாடல்" என்ற பாடத்தில் **பால்முனி** ஒரு இசைக் கலை ஆசிரியனாக நடிக்கிறான். அவன் ஒரு சிறுவனுக்கு "பியானோ"வையும் வாய்ப்பாட்டையும் அழகாகக் கற்றுத் தருகிறான். தன் திறமையையெல்லாம் கூட்டிக் குழைத்து, அவனைப் புகழின் உச்சநிலைக்குக் கொண்டு வர முயல்கிறான். சிறுவன் இளைஞனாகிறான். அவன் எங்கும் சுற்றித் தனது இனிய இசையால், உள்ளங்கள் பலவற்றைக் கவர்கிறான். தனது மாணவனின் புகழைக் கண்டு திறமையை எண்ணி, கற்பனைக்கோட்டைகள் பலவற்றைக் கட்டிக்கொள்கிறான் ஆசிரியன். அப்படி அவன் கனவில் திளைக்கும்போது ஒருநாள், அவர்கள் வாழ்வில் முதன்மையான கச்சேரி ஒன்று நடக்கிறது. அந்தக் கச்சேரியின் ஒவ்வொரு நிமிடமும் பொன்னாகக் கழிகிறது; மக்கள் கையொலி பேரொலியாகக் கிளர்ந்தெழுகிறது; ஆசிரியன் "இவனால் இன்னும் உயரப்போகிறது என் புகழ்!" என்று கற்பனையில் மிதக்கிறான். அந்நேரத்தில் திடீரென, பியானோ வாசித்துக் கொண்டிருந்த மாணவன் அதன் மேலேயே வீழ்ந்து, குருதி கக்குகிறான். ஆம்! அவனது சொந்த ஆசைகளில் வெற்றி காணாத இதயம் வெடித்துவிட்டது. மாணவனை நம்பி ஆயிரம் கோட்டைகள் கட்டிய ஆசிரியனவன், மாண்டுகிடக்கும் பிணத்தின்முன் சிலையாகிறான்.

மேலைநாட்டு நகர் ஒன்றின் வீதியில் பூக்காரி ஒருத்தி திரிகிறாள். அவளைக் கண்ட ஒலி நூல் பேராசிரியர் ஒருவர், அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறார். கொச்சை மொழி பேசிக் கேவலமாகத் திரிந்த அவள், பேராசிரியரின் முயற்சியால் - பாடங்களால், சிறந்த கலைவாணியாக மாறுகிறாள். உயர்ந்த குடிப்பிறந்த சீமாட்டியாக உருப்பெறுகிறாள். அவளது வளர்ச்சியெலாம் கண்டு, அதன் பயனையெல்லாம் அனுபவிக்கத் துடிக்கும் பேராசிரியர் இறுதியில் ஏமாற்றமடைகிறார். இது பெர்னாட்சாவின் படைப்பான "பிக்மேலியன்" என்ற கதையாகும்.

சார்லிசாப்ளின் நடித்து வெளியிட்ட "புகழ்ஒளி" என்ற கதையும் இப்படித்தான். கால் விளங்காதிருந்த பெண்ணொருத்தியை, தன் ஆதரவான மொழியாலும், முறையான பயிற்சியாலும் சிறந்த நடனக்காரியாக்கினான் கிழவன் ஒருவன். இறுதியில் அக்கிழவன் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவள் காதல் வேறொருவன்பால் திரும்புகிறது. கிழவனான ஆசிரியன் ஏமாற்றமடைகின்றான்.

இப்படி குருவுக்கும் மாணவருக்கும் உள்ள தொடர்புகள் பலவற்றைப் படிக்கும்போதும், பார்க்கும்போதும். தமிழில் இம்மாதிரிக் கதைகள் இல்லையோ என்ற எண்ணம் எழுந்தது. **மயிலாடும் பாறையின்** தலைவி இரஞ்சிதம், நட்டுவனார் கங்கைமுத்துவால் புகழொளியின் உச்சிப்படிக்கு ஏறியவள். தாசி குலத்தில் பிறந்த அவள் பிறருக்கெல்லாம் முன்னோடியாக, குமரப்பன் என்ற மனிதரைக் காதலித்து, அவரின் மனைவியாகிறாள். அவளை ஏற்றுக்கொண்ட குமரப்பர், எந்த வெளியிடத்திலும் நாட்டியம் ஆடக் கூடாது என்று கூறிவிட்டு சுமத்திராவிற்குக் கப்பல் ஏறுகிறார். குமரப்பர் சுமத்திராவிலிருக்கும் நாளில், கங்கைமுத்து நட்டுவனாரின் தவிர்க்கமுடியாத வேண்டுகோளுக்காக, இரஞ்சிதம் ஒரே ஒருநாள், இராமனாதபுரம் அரண்மனையில் நடக்கும் போட்டியில் ஆடுகிறாள். கொண்டவனிடம் தந்த வாக்குறுதிக்கு மாறாக, குருவின் வற்புத்தலுக்காக இவ்வாறு ஆடியதால், வளர்ந்த வினை, ரஞ்சிதத்தின் உயிரைக் குடிக்கிறது. இப்படிக் குருவிற்கும் மாணவிக்குமிடையே நடைபெற்ற போராட்டம், தோழர் தென்னரசு அவர்களால், எளிய தமிழில்வழங்கப்பெற்றுள்ளது. மேலும் இந்தக் கதை சடந்த நூற்றாண்டில் உண்மையிலேயே நடைபெற்றகதையாகும். ஆக, இதைத் தனது பேனா வலிமையால் அழகுறத் தீட்டிக் காட்டிய தென்னரசு பாராட்டிற்குரியவர்.

ஆசிரியர் :

எஸ். எஸ். தென்னரசு.

விலை ரூ. 1-8.

கிடைக்குமிடம் :

காவியக் கழகம்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

★

தையற் கலை

(திங்கள் இதழ்)

தையற் கலைக்கென்று தனி ஏடு கண்டிருக்கிறார், தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள். தையற் கலைஞர் பலரின் வாழ்வுக் குறிப்புக்கள், தையல் பயிற்சிகள் முதலியவற்றோடு, தையல் தொழிலாளர்க்காக அரசினரிடம் போராடும் கருத்து நிறை கட்டுரைகளும் இடம் பெற்று, உரிமை முழங்குகின்றன. இத்தொழில் துறை ஏடு தொழிலாளர்க்கு வழிகாட்டிமட்டுமல்ல; வலிய படைக் கருவியுமாகும்.

ஆசிரியர்: **கே. பி. சுந்தரம்.**

விலை: **தனி இதழ் 20 காசு.**

முகவரி :

132, புரசை நெடுஞ்சாலை, சென்னை-7.

★

வரப்பெற்றோம்

திருச்சி இராமசாமி பாடும் திராவிட இயக்கப்பாடல்கள்.

விலை 19 காசுகள்

கிடைக்குமிடம் :

மொழி வெளியீடு, சென்னை-1.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

அமைச்சர் மட்டும் சொல்கிறார், அவர் பம்பாயில் பிறந்தார் என்று. "பஞ்சாப் ஆனாலும் சரி; காந்திஜீ பிறந்த பம்பாய் மாகாணம் ஆனாலும் சரி; எங்கும் தீண்டாமை ஒழிந்து வருகிறது!" என்று பேசுகிறார் அவர். மக்கள் இருந்தால்தானே தட்டிக் கேட்பர். "கண்ணுக்குத் தெரிந்த மட்டில் கடற்கரை மணலைத்தானே சந்திக்கிறோம்!" என்று அடித்து முழக்கினார்; இடித்து நொறுக்கினார்.

இந்த "உண்மை"யை, தப்பித் தவறி அங்குச் சென்றுவிட்ட நான் இடது காதால் வாங்கி வலது காதால் விடுவதற்குள் அமைச்சர் இன்னொரு அணுகுண்டைத் தூக்கிப் போட்டார்.

"உலகம் மிக மிக வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. அகங்காரமாகத் திரிந்த ரூஸ்வெல்ட், தான் ஒருபடி இறங்கி வந்து ஐசனோவரைக் கண்டு பேசியிருக்கிறான் கடந்த வாரம். இப்போது சொல்லுங்கள்-ரூஸ்வெல்ட் ஐசனோவரைச் சந்தித்துப் பேசுகிறார் என்றால் உலகம் மாறவில்லையா?" என்றார்.

"ரூஸ்வெல்ட் மாண்டு மண்ணாகி ஆண்டுகள் பலவாகிவிட்டனவே. அவன் எப்படி உயிருடன் இருக்கும் ஐசனோவரை வந்து கண்டுபோனான்? அப்படியானால் அவர்கள் சந்திப்பு, அணைக்கட்டு அமைச்சர்க்கு மட்டும் எப்படித் தெரிந்தது?" என்று அலமந்தேன். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த காவல்துறைக்காரர் ஒருவர். "ஐசனோவரை, குருஷ்சேவ் கண்டு பேசியதைத்தான் அப்படிச் சொல்கிறார்கள்!" என்று விளக்கிய பின்தான் நான் உண்மையை உணர்ந்தேன். ஆகா, இவ்வளவு பெரிய மதியூகிகள் அமைச்சர்களாயிருக்கையில் நமக்கென்ன கவலை? நீங்களே சொல்லுங்கள், இத்தகைய அறிவுக் களஞ்சியங்களை நம்பினால் காலா காலத்தில் நாம் முன்னேறலாம் அல்லவா? இதை ஒப்புக்கொண்டால், இனி அந்த அமைச்சரைக் கண்ட இடத்திலெல்லாம் விரட்டி விரட்டி ஆரத்தி எடுங்கள்!

-மா. பாண்டியன்.

சென்னை மாவட்ட தி. மு. க. 3-வது மாநாடு

அக்டோபர் 17, 18 (சனி, ஞாயிறு) நாட்களில்

எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெறும்.

தலைவர் : டி. கே. சீனிவாசன்

★

திறப்பாளர் : அரங்கண்ணல்

அறிஞர் **அண்ணா**, நாவலர் **நெடுஞ்செழியன்**

உள்ளிட்ட கழக முன்னணிக் காளையர் அரசியற் கருத்தளிப்பர்.

சிதம்பரம் செயராமன்

நாகூர் அனீபா

இன்னிசை விருந்தளிப்பர்.

★

கலைஞர் கருணாநிதி

இலட்சிய நடிகர் இராசேந்திரன்

இரு நாட்களிலும் நாடக விருந்தளிப்பர்.

அனைவரும் வருக!

புத்துரம் பெறுக!

அன்புடன் அழைக்கும்

கோ. செங்குட்டுவன்,
வ. கு. தலைவர்.

கே. எம். கண்ணபிரான்,
வி. இளஞ்சேரலாதன்,
செயலாளர்கள்.

தி. சு. நல்லதம்பி எம். சி.
தொண்டர்படைத் தலைவர்.

நகரத்தந்தை அ. பொ. அரசு-பொருளாளர்.

[அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவை ஒட்டி, ஈழத்து "சுதந்திரன்" ஏடும், சிங்கை "தமிழ்நேசன்" ஏடும் பாராட்டுக் கட்டுரைகளும், வாழ்க்கைக் குறிப்புக்களும் வெளியிட்டன. அவற்றை இங்கே எடுத்து வெளியிட்டிருக்கிறோம். —ஆ-ர்.]

★

"சுதந்திரன்" 20-9-'59.

மூன்று எழுத்துக்கள் இன்று மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கின்றன. தமிழ் நாடானாலும் சரி, தமிழன் வாழும் பிறநாடுகளானாலும் சரி—அங்கெல்லாம் அந்த மூன்று எழுத்துக்களுக்கும் முக்கியத்துவம் உண்டு.

'அ...ண்...ணா'—இவைதான் அந்த மூன்று எழுத்துக்களும். அண்ணாமலைகள், அண்ணாசாமிகள் இன்னும் அண்ணா என்ற பகுதியை முதலில் கொண்ட பெயருடையோர் ஆயிரம் பேர் இருக்கலாம். அவர்களில் எவராலும் "அண்ணா"வாகிவிட முடியவில்லை. அண்ணாத்துரை ஒருவரே வயதில் குறைந்தோருக்கும் மிகுந்தோருக்கும், கற்றோருக்கும் மற்றோருக்கும், ஒத்த கொள்கை உடையோருக்கும் எதிர்த் தரப்பாருக்கும், எளியோருக்கும் வலியோருக்கும், எல்லோருக்கும் அண்ணா ஆனார்.

அண்ணா

அன்பின் அடையாளம்—மதிப்பின் முத்திரை அந்த வார்த்தை. காஞ்சிப் பெருநகரம் தமிழ்நாட்டுககுத் தந்த அண்ணாத்துரை, எம். ஏ. பட்டம் பெற்றதோடு, பதவியும் பவுசும் தேடியிருக்கலாம்; துரைத்தனம் நடத்தியிருக்கலாம். ஆனால் அதை அவர் விரும்பவில்லை. தமிழ்மீது பற்றுக்கொண்டார். தம்மவரான தமிழரை ஒரு அங்கமாகக்கொண்ட திராவிடப் பெருங்குடிமீது பாசம் வைத்தார். அவர்கள் வாழும் முறை, நாட்டின் இழிநிலை இவற்றைக் கண்டு துடித்தார். அதன் விளைவு? பொதுநலப் பணிக்குத தம்மை அர்ப்பணித்தார். துரைத்தனம் நடத்தும் எண்ணமே அற்றவரானார்; எனவேதான் நம்மிடம் இப்போது 'துரை' இல்லை; அண்ணா இருக்கிறார்.

அறிஞர்

அண்ணா அண்ணாவாக மட்டும் இல்லை. அவர் அறிஞர் அண்ணா. அப்படித்தான் எல்லோராலும் அழைக்கப்படுகிறார். அன்பின் அடையாளமான அண்ணா என்ற சொல் எப்படி அண்ணாத்துரையை மட்டும் குறிப்பதாக உள்ளதோ அதேபோல அறிவின் அடையாளமான அறிஞர் என்றவார்த்தையும் இன்று அண்ணாத்துரையையே குறிப்பதாக இருக்கிறது. இதைவிட வேறு என்ன பெருமை வேண்டும்?

அறிமுகம்

தென்னாட்டவருக்குத் தன்மான உணர்வு ஊட்டி சமூக சீர்திருத்தப் பணி புரிந்துவரும் வெண்தாடி வேந்தராம் ஈ. வெ. இராமசாமிப் பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் 14 ஆண்டுகள பயிற்சி பெற்ற அண்ணா, சீர்திருத்த வாதியாக, தமிழ்நாட்டின் தலைசிறந்த பேச்சாளனாக, அருமையான எழுத்தாளனாக, நல்ல பத்திரிகை ஆசிரியனாக, தீவிர சிந்தனையாளனாக, அற்புத நடிகனாக, எல்லாவற்றிற்கும் மேலாக மக்களைத் தன்பால் ஈர்த்திழுக்கும் சக்தி வாய்ந்தவனாகவும் செயல் வீரனாகவும் நாட்டுக்கு அறிமுகமானார்.

இன்று அண்ணா அரசியல் வாதியாக மக்கள் பிரதிநிதியாகத் திகழ்கிறார். அரசியல் துறையிலும் அண்ணாவுக்கு ஈடாகச் சொல்ல வேறு யாரும் இல்லை. 10 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியாரின் பொருந்தாக் கல்யாணம் காரணமாக மனக்கசப்பு அடைந்து, அவர் தலைமையிலிருந்த திராவிடர் கழகத்திலிருந்து விலகியதோடுதான், அண்ணா அரசியலில் தீவிர ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். தி. மு. க. (அதுவும் மூன்று எழுத்துக்கள்தாம்) உதயமாயிற்று. பக்கத்துணைக்குப் பலர் சேர்ந்தனர். கொள்கை வகுத்தனர். பட்டிதொட்டி எங்கும் பிரசாரம் ஆரம்பமாயிற்று. "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற குரல் எங்கும் எதிரொலித்தது. கழகத்தில் லட்சக்கணக்கில் மக்கள் சேர்ந்தனர். கடந்த 1957 தேர்தலில் சென்னை சட்டசபைக்கு கழகத்தவர் 15 பேர் (அண்ணா உட்பட) தெரிவு செய்யப் பட்டனர். டில்லிப் பாராளுமன்றத்துக்கு 2 பேர் அனுப்பப்பட்டனர். அணிமையில் நடந்த சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் கழகம் நிர்வாகத்தையே கைப்பற்றியது.

விடுதலைப் படை

ஆயினும் இதுவல்ல பெருமை தருவது, அண்ணாவுக்கு. மற்ற அரசியல் தலைவர்களிலிருந்து அண்ணாவைத் தனியாக உயர்த்திக் காட்டும் சிறப்புக்குரிய அம்சம் வேறு. கழகத்திலே கொள்கைக் குழப்பம் இல்லை; பதவிப் பூசல் கிடையாது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று அண்ணா விதித்த காப்பை மீறுவார் இல்லை. எதையும் தாங்கும் இதயம் எல்லோருக்கும் உண்டு. செயல் வீரர்களுக்கு குறைவில்லை. பேச்சு, எழுத்து, நாடக, பிரசாரப் பணிகளுக்கு ஒவ்வொருவரும் தயார். எல்லாவற்றிற்கும் மேலாக இன்னொன்று. அண்ணா வாய்திறந்து பணிக்கவேண்டாம். கண் இமைத்துக் குறிப்பு உணர்த்தினாலே போதும். கழகத்தவர் எவரும் எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள்.

அண்ணாவின் வாயிலிருந்து என்ன வருகிறது, பேனா எதைப் பொறிக்கிறது என்பதில் எல்லோருக்கும் இன்று ஒரே அக்கறை. இது அவரவர் நிலையைப் பொறுத்து அன்பாலும், ஆர்வத்தாலும், அச்சத்தாலும் ஏற்படுகிறது.

அண்ணா யார்க்கும் எளியவர்; பழகுவதற்கு இனியவர். அன்பின் சின்னம், பண்பின் பிறப்பிடம் அவர். இத்தியாதி சிறப்பியல்புகள் அவரது அறிவோடும் ஆற்றலோடும் சேர்ந்திருப்பதாலேயே மாற்றுக் கட்சிக் காரரின் அபிமானத்துக்கும் அவர் உரியவராக விளங்குகிறார்.

பெரியாரும், அண்ணாவும்

பெரியாரை என்று விட்டுப் பிரிந்தாரோ அண்ணா, அன்றிலிருந்தே அவரையும் அவரது தோழர்களையும் "கண்ணீர்த்துளிகள்" என்றும், இன்னும் எப்படி எல்லாமோ பெரியார் திட்டிக்கொண்டு வருகிறார். இத்தனைக்கும் பெரியாரின் உள்ளம் புண்படும்படி ஒரு வார்த்தைதானும், அண்ணா பேசியதில்லை. தி. மு கவினர் யாரையும் அப்படிப் பேச அனுமதித்ததுமில்லை. பெரியாரைத் தமது அறிவுத் தந்தையாக, தலைவராகவே மதித்து வருகிறார். அண்ணாவை தி மு. கழகத்தலைவர் என்று பலரும் சொல்லிக்கொண்டாலும் கழகத்தின் தலைமைப் பதவி இன்னமும் காலியாகவே இருக்கிறது. நிரப்பப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். பெரியார் காலத்துக்குப் பின்னர் ஒருவேளை அது நிரப்பப்படலாம். இப்பொழுது பொதுச்செயலாளரே கழகக் காவலராக இருந்து வருகிறார்.

இன்னும், பெரியார் தொடங்கி வைத்த பணியையே அண்ணா இன்றும் செய்துகொண்டு வருகிறார். "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற உரிமைக்குரல் எழுப்பிய பெரியார் "திராவிட நாடாவது வெங்காய நாடாவது" என்று கேலி செய்யுமளவுக்கு நிலை மாறிவிட்டபோதிலும், அண்ணா திராவிட நாடு இலட்சியத்துக்காகவே பாடுபட்டு வருகிறார்.

இலங்கையும் அண்ணாவும்

இலங்கை மக்கள்மீது அவருக்கு உள்ள அபிமானம் சொல்லிமுடியாது. இதை மனதில் வைத்தே இங்குள்ள சிங்களத் தலைவர்கள் சிலர் தி மு. கவையும் தமிழரசுக் கட்சியையும் இணைத்து ஆபததுச் செய்திகளை அவ்வப்போது கட்டவிழ்த்துவிட்டு வருகிறார்கள். — தேபந்து.

★

"தமிழ்நேசன்" 27-9-'59.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சி. என். அண்ணாதுரைக்கு செப்டம்பர் 15-ந் தேதியன்று (செவ்வாய்க்கிழமை) 50 வயது ஆகியது.

"அறிஞர் அண்ணா! எங்கள் அண்ணா!" என்று ஆயிரமாயிரம் தம்பிமார்கள் ஆசை பொங்க—அன்பு பொங்க—அருமை பெருமையாக அழைக்க—இளைஞர் படையின் தளபதியாகத் திகழ்கிறார் அண்ணாதுரை!

அரும்பு மீசை

அரும்பு மீசை—அழுக்குப் பிடித்த சட்டை—அகன்ற நெற்றி—சிரித்த முகம்—சீவி விடப்படாத தலை—கொஞ்சம் குட்டையான உருவம்—இந்த எளிய தோற்றம்தான் அண்ணாதுரை!

அவருடைய நாவில் அழகுதமிழ் நடனம் ஆடும்! பேனாவில் செந்தமிழ் குதித்து விளையாடும்! புலவர் நாவில் புரண்டுகொண்டிருந்த அடுக்குத் தமிழை, பொது மேடைக்குக் கொண்டுவந்து, புதிய 'பொலிவு' கொடுத்தார்! அண்ணாதுரை பேசுகிறார் என்றால் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும், மனங்கனிந்து கேட்பார்கள்!

காஞ்சிபுரம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் 1909-ம் ஆண்டு அண்ணாதுரை பிறந்தார். (தமிழ் ஆண்டு "சவுமியா", ஆவணி மாதம் 30 ந் தேதி.) தாயார் பங்காரு அம்மாள். தந்தை நடராசன். தாயார் இருக்கிறார்.

சாதாரணக் குடும்பத்தில் பிறந்தார். காஞ்சிபுரத்தில் உள்ள 'பச்சையப்பா உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்தார்! பிறகு சென்னையில் உள்ள 'பச்சையப்பா கல்லூரி'யில் படித்து, மூன்று பாடங்களில் 'எம். ஏ.' பட்டம் பெற்றார்!

'பொடி அனுபவம்'

அண்ணாதுரை அதிகமாகப் பொடி போடக்கூடியவர்! படிக்கும் பருவத்திலேயே இந்தப் பழக்கம் ஏற்பட்டு விட்டது!

ஒரு சமயம், பரீட்சை எழுதிக் கொண்டு இருந்த அண்ணாதுரை, பைக்குள் கையை விட்டு எதையோ எடுத்தார்! 'ஏதோ எழுதிக்கொண்டு வந்திருக்கிறார்' என்று நினைத்து, அண்ணாதுரையை ஒரு ஆசிரியர் பிடித்துக்கொண்டா! "கையைத் திறந்து காட்டு!" என்றார். அண்ணாதுரை கையைத் திறந்தார்! பொடி மட்டை இருந்தது!

அரசியலில்

கல்லூரிப் படிப்பு முடிந்ததும் கொஞ்ச நாள் ஆசிரியர் வேலை பார்த்தார். பிறகு அரசியலில் குதித்தார். நீதிக் (ஜஸ்டிஸ்) கட்சியின் சொற்பொழிவாளராக இருந்தார். பிரமுகர் ஆனார்!

அந்தக் கட்சி திராவிடர் கழகமாக மாறியது. ஈ. வே. ரா. பெரியாருக்கு வலது கையாக அண்ணாதுரை இருந்தார்! அவருடன் வடநாட்டில் சுற்றுப் பயணம் செய்தார்!

1948-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தளபதியாக இருந்தார்!

தி. மு. கழகம்

1949-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார். அதனுடைய பொதுச் செயலாளராக இரு[illegible]தார். 'சிங்கத் தம்பி'களின் 'தங்[illegible] தலைவ'ராக இருக்கிறார்.

சென்னை சட்ட சபை 'மெம்ப'ர[illegible] காஞ்சிபுரம் தொகுதியில் இ[illegible]தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்ட ச[illegible] தி. மு. கழகத்தின் தலைவர் அண்ணாதுரை!

சிறை வாழ்க்கை

அண்ணாதுரை சிறந்த எழுத்தாளர்! நாடகம்—நாவல்—சிறுகதை—கட்டுரை என்று ஐம்பது புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

"ஆரியமாயை" என்ற புத்தகம் எழுதியதற்காக சிறைச்சாலைக்குச் சென்றார்! "மும்முனை போராட்டம்" நேருவுக்கு கருப்புக்கொடி காட்டிய போராட்டம் ஆகியவற்றிலும் சிறைச்சாலையில் அகபபட்டார்.

இராணி

அண்ணாதுரை திருமணமானவர். மனைவி பெயர் இராணி. பரிமளம், இளங்கோவன், கவுதமன், இராசேந்திரன் என்ற மக்கள் இருக்கிறார்கள்.

புறு வளர்ப்பதும், நண்பர்களுடன் 'அரட்டை'யடிப்பதும் இவருடைய பொழுதுபோக்கு! நிறைய சினிமா பார்ப்பார்! 'அறிஞர்' ஆனாலும் இன்னும் ஏராளமாகப படிக்கிறார்—எழுதுகிறார்!

"'இன்பத் திராவிடம்' காண்பதே என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள்!" என்று உறுதியுடன் உரைக்கிறார் அண்ணாதுரை!

பொதுக் கூட்டங்களுக்குத் தாமதித்து வருவது இவருடைய பழக்கம்! 'அதற்குள் பேச்சை நிறுத்தி விட்டாரே!' என்று ஏங்கும்படியாக பேச்சை முடிப்பது இவருடைய வழக்கம்!!

நடிகர்

அண்ணாதுரை சிறந்த நடிகர்! நாடகங்களில் நடித்தும் இருக்கிறார்! இப்போதும் நடிக்கிறார்! சினிமாவுக்குக் கதை வசனம எழுதியிருக்கிறார்!

— 10-ம் பக்கம் —

—9-ம் பக்கத் தொடர்ச்சி—

[சம்பத் அவர்களின் வருகைக்கு அனுமதி மறுக்கப்பட்டதுபற்றி, சிங்கப்பூர் "தமிழ் நேசன்" ஏடு தனது 25-9-'59-ம் நாளிதழில் வெளியிட்டுள்ள கட்டுரை இது. —ஆ-ர்.]

உலகைச்சுற்றி...

க. கனகசுந்தரன்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரும் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஈ. வி. கே. சம்பத், மலாயா வருவதற்குத் தடை விதிக்கப்பட்ட செய்தி கேட்டு, இங்குள்ள ஆயிரமாயிரம் தமிழர்களும் அதிர்ச்சியும்-ஏமாற்றமும் அடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

திரு. சம்பத்துக்கு, மலாயா வர அனுமதி மறுக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும், முன்பு சிங்கையிலிருந்து வெளி வந்த சிங்கப்பூர் ஸ்டாண்டர்டு (இப்பொழுது நின்றுவிட்டது) பத்திரிகையில் வெளி வந்த செய்திதான் நினைவுக்கு வந்தது. மூடப்படுவதற்கு முன் அது செய்து வெற்றி கண்ட இந்த கைங்கரியத்தை இந்நாட்டுத் தமிழ்மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

அத்துடன், மக்கள் முற்போக்குக் கட்சித் தலைவர்கள் தங்கள் தேர்தல் பிரசாரத்தில், மலாயன் இந்தியன் காங்கிரஸ் "புள்ளி"களில்சிலர், சம்பத் ...கையைத் தடுக்க மும்முரமாக ...செய்து வருகின்றனர் என்று ... சாட்டியதும் நினைவுக்கு ...ன் செய்தது. ஸ்டாண்டர்டில் ...செய்தியும், சம்பத் தடை...த் கூறப்படும் காரணமும் ...முறைய ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.

இந்தச் சம்பவம், குருவி உட்கார்ந்ததும், பனம்பழம் விழுந்த கதையைப் போன்றதாகவும் இருக்கலாம். அது நிற்க,

திராவிட முன்னேற்ற கழகத் தலைவர்களில் ஒருவரான திரு ஈ. வி. கே. சம்பத்தின் வருகையை, சிங்கப்பூர் சர்க்கார் ரத்து செய்திருப்பதையே கூட்டரசு சர்க்காரும் பின்பற்றும் என்று பிரதமர் துங்கு சிங்கப்பூரில் கூறியிருக்கிறார்.

ஆனால் அதற்கு மறுநாளே, திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர் திரு, ஈ. வி. கே. சம்பத் சிங்கப்பூருக்கு வருவதைத் தடை செய்வதென்ற முடிவு, பெடரேஷனுக்கு விஜயமளிக்க அவருக்கு அனுமதியளிக்க தாங்கள் உத்தேசிக்கவில்லை என்று பெடரேஷன் அரசாங்கம் அறிவித்ததன் பேரிலேயே செய்யப்பட்டது என்று சிங்கை சர்க்கார் அறிவித்திருக்கிறது.

இதில் எது உண்மை என்பது, இன்னமும் ஒருவருக்கும் புரியாத புதிராகவே இருந்து வருகிறது. "அடிப்பதுபோல் அடிக்கிறேன்-அழுவதுபோல் அழு" என்ற பழமொழியைத்தான் இந்தக் கதை நமக்கு நினைவூட்டுகிறது. என்றாலும், காலப் போக்கில் எது உண்மை என்பது தானாகவே தெரிந்துவிடும்.

கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்கார், காங்கிரஸ்காரர்களின் பலாத்கார கிளர்ச்சியினால் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, மற்ற மாகாணங்களில் உள்ள எதிர்க் கட்சிகள் காங்கிரஸ் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடத்தின.

ஆனால், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்காருக்குச் சரியான எதிர்க் கட்சியாக அமைந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம்மட்டும் எந்தவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

தி. மு. க. ஜனநாயக கோட்பாடுகளில் நீங்காத நம்பிக்கைக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒன்றே போதுமான சான்றாகும்.

கடமை-கண்ணியம்- கட்டுப்பாடு என்று மூன்று லட்சியங்களை முன் வைத்து, தென்னகத்தில் வளர்ந்து வரும் அரசியல் உலகில் நடக்காத புதுமையல்லவே!

திரு. சம்பத் வருகையை இரு சர்க்கார்களும் தடை செய்ததன் மூலம், திராவிட முன்னேற்றக் கழகத்தை இரு சர்க்கார்களும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றன என்பது தெளிவாகிறது. அத்துடன், தனித் தமிழ்நாடு அமைக்கும் கழகத்தின் லட்சியத்திற்கு இந்நாட்டில் ஆதரவு திரட்டுவதே திரு. சம்பத்தின் நோக்கமாகும் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றது என்றே கருதுகிறோம்.

திராவிட நாடு பிரிவினைக்காக, கடமை தவறாமல்-கண்ணியத்துடனும்-கட்டுப்பாடுடனும் தங்களையே தியாகம் செய்வதற்கு எத்தனையோ ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திராவிடப் பாசறையில் அணிவகுத்து நிற்கும்போது, திரு சம்பத் தனது கட்சிக்கு ஆதரவு தேட மலாயாவுக்கு வருகிறார் என்று கூறுவது கேலிக் கூத்தாகும்.

ஆதரவு தேட திரு சம்பத் மலாயா வருகிறார் என்றால், அவரை வரவேற்கும் பணியில் இங்குள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் ஈடுபட்டிருப்பார்களா?

திரு. சம்பத், கழகத்திற்கு ஆதரவு தேட இங்கு வரவில்லை என்பதை நாடு அறியும்-மக்கள் அறிவர்.

மாறாக அவரை இங்கு வர அனுமதித்திருந்தால் இந்நாட்டில் கம்யூனிஸ்ட் எதிர்ப்புணர்ச்சி அதிக பலமடையவே துணை புரிந்திருக்கும் என்பது நம் நம்பிக்கை.

சுதந்தரத் தமிழ்நாடு - கோரிக்கையை வற்புறுத்தும் முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் கூட, சென்ற ஆண்டிற்கு முன்பு, தமிழர் திருநாளில் கலந்து கொண்டு மலாயாவின் பல பகுதிகளிலும் சொற்பொழிவாற்றிவிட்டுச் சென்றார்.

அப்பொழுது, அவர் இந்நாட்டு தமிழர்களின் ஆதரவைத் திரட்ட வந்திருப்பதாக எவரும் கூறவில்லை. இதே போன்றுதான், திராவிட நாடு பிரிவினைக் கொள்கைக்கு வித்திட்டு, திரு. சம்பத்போன்ற ஆயிரமாயிரம் தோழர்களை அதில் ஈடுபடும்படி செய்த பெரியார் ஈ. வெ. ரா. இந்நாட்டுக்கு வந்தபோதும் எவரும்-எதுவும் கூறவில்லை.

ஆனால், சொல்லின் செல்வர் சம்பத்திற்கு மட்டும் ஏன் இந்தத் தடை? ★

— 12-ம் பக்கத் தொடர்ச்சி —

ஆனால் ஒன்றைமட்டும் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். பாரதியாரைப்போல, 'நாடோடிப் பாடல்களின் மெட்டு, கும்மி கண்ணிகள்' போன்ற சந்தங்களை, வேறு யாரும் கையாண்டதாகத் தெரியவில்லை. வேண்டுமானால், வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரைக் குறிப்பிடலாம். பாரதியாருக்கு முன்னால், இவர்தான் சந்தப்பாக்களை மெருகோடு பாடியிருக்கின்றார்கள். பேராசிரியர் சுந்தரனார் அவர்கள் சந்தம் நினைந்து ஒரு பாடல் கூடப் பாடியதாகப் படித்த அளவு தெரியவில்லை. இடையிடையே சில பாடல்களில் ஒலியமைப்பு ஒத்து வரலாம். அது சந்தப் பாடல்களாகாது. வேண்டுமானால், நாம் அதற்குச் சந்தத்தை அமைத்துக்கொள்ளலாம். பாரதியார் பாடிய சந்தங்கள் முழுமைக்கும், சுந்தரனார் பாடிய மனோன்மணியத்தில் இடமிருக்கிறதா? இருந்தால் எடுத்துக் காட்டுங்கள். கற்று மகிழ்கின்றோம்.

"வேற்படைத் தலைவரே!
நாற்படையாளரே
கேட்பீர் ஒரு சொல்"

என்று சுந்தரம் பிள்ளை பாடியதைப் பாரதியார்:—

"சேனைத் தலைவர்காள்
சிறந்த மந்திரிகாள்
யானைத்தலைவரும்
அருந்திறல் வீரர்காள்
அதிரதமன்னர்காள்
துரகத்ததிபர்காள்
எதிரிகள் துணுக்குற
இடித்திடு பதாதிகாள்"

என்று, நீட்டிமுழக்கி ரப்பரைப் போல் இழுத்திருக்கின்றாராம். என்னே ஆராய்சசியின் நுண்மாண் நுழைபுலம்? நண்பர் கூறும் இம்முறையில், தமிழகத்துக் கவிதைகளை நாம் ஆய்ந்தால், ஒரு கவிஞனை மற்றொரு கவிஞன் காப்பியடித்ததாகவே தென்படும். சுந்தரம் பிள்ளையின் காலத்திற்குமுன் வாழ்ந்த புலவர்களின் பாடல்களையும் - சுந்தரனாரின் கருத்துக்களையும் ஆராய்ந்தால், மனோன்மணியத்தில் கையாண்ட பல உவமைகளும், கருத்துக்களும், பொருளும் பழைய சரக்காகவே இருக்கும். அதனால், சுந்தரம் பிள்ளையை யாம் குறைகூறத் தலைப்படோம். அவ்வாராய்ச்சியும் பயனற்ற வேலையெனச் சான்றோர் இகழ்வர். இதற்கு நண்பர் அவர்கள் கூறப் போகும் தெளிவு என்ன?

பாரதியார் பள்ளிச்சிறுவராக இருக்கும்பொழுதே, மனோன்மணீயம் அச்சாகி உலவத் தொடங்கிவிட்டது என்பதற்காகப், பாரதிமேல் குற்றங்களை அடுக்குவதா? அதுவும் இம்முறையிலா?

அடுத்து இன்னொன்று. "பாரதிக்கு மதிப்புத் தரவேண்டும் என்பதற்காகப் பிறரைப் பழிப்பதா? இது அவரின் வினா?" என்று, கட்டுரையைப் பற்றி ஆசிரியர் (இதழாசிரியர்) எழுத வந்தபோது, குறிப்பிட்ட சொற்கோவை. ஆனால், கட்டுரையாசிரியர், பாரதியை உயர்த்திக் கூறியவர்களை மட்டும் குறிப்பால் பெற வைத்திருக்கின்றாரே யொழிய, அவர்கள் யார் யாரைப் பழித்தார்கள்? என்று மறந்துங்கூட எழுதவில்லை. யார் பழித்தது? யாரைப் பழித்தார்கள்? என்று தெள்ளத் தெளியக் காட்டியிருக்கலாமல்லவா? ஆனால் அவ்வாறு காட்டாததற்குக் காரணம் கூற முன்வருவாரா?

திருத்தம்.

இவ்விதழ் 7-ம் பக்கத்தின் இடைத்தலைப்புகளில் "சொத்து" என்முள்ளதை "சொத்துக்கள்" என்றும், "வித்து" என்றுள்ளதை "வித்துக்கள்" என்றும் திருத்திக்கொள்க.

அடுத்த இதழில் .

"சிலப்பதிகாரத்தில் வெண்பா"

என்ற தலைப்பில் செப்டம்பர் 26-ம் நாளிட்ட இதழில் வந்த கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரை ஒன்று, அடுத்த இதழில் வரும்.

[ஆ-ர்.]

பாரதியைப் புகழ்ந்தாலே மற்றவர்களைப் பழிப்பதாகப் பொருள் கொண்டுவிட்டாரோ? என்னவோ? 'அறிஞர் அண்ணா அவர்கள் ஒப்பற்ற தலைவர் என்று ஒருவர் புகழ்ந்து பேசினால், மற்ற தலைவர்களைப் பழிப்பதாகவல்லவா இவர் பேச்சு அமைந்திருக்கிறது?' என்று வாதிடுவாரோ? என்னவோ? யார் கண்டார்கள்.

நண்பர் காட்டிய அத்தனை சான்றுகளையும் யான் மறுத்து எழுதவில்லை. ஏன் என்பதை நீங்களே விளங்கியிருப்பீர்கள். இறுதியாக ஒன்று; "தமக்கு வேண்டியவரை மட்டும் அமர கவியாக்குவதும், வேண்டாதவரைப்பற்றி ஒரு சொல்லும் செலாவிடாதிருப்பதும தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இழைக்கப்படும் பெருந் துரோகம் ஆகும்" என்று நண்பர் மனம் நொந்து கூறுகிறார். "அவர்கள் அப்படிச் செய்கின்றார்களே" என்பதற்காகப் பாரதியாரை குற்றக் கூண்டில் ஏற்ற வேண்டும் என்பது அறிவுடைமையாகாது. வேண்டுமானால், அப்படிச் சொல்பவர்களைப் பற்றி ஆயிரங் கூறுங்கள்; ஏற்றுக் கொள்வோம். பாரதியார், அவர்களுக்குமட்டும் வேண்டியவரா? நமக்கு வேண்டாதவரா? மக்களுக்காக உழைக்கும் கவிஞர்களை ஏன் பிரித்துக் காட்டிப் பகையை வளர்த்துக்கொள்கிறீர்கள்? அப்பாதுரையாரைப்பற்றி ஒருவர் பேசும்பொழுது, மற்றவர்களைப்பற்றியுங் குறிப்பிடாவிட்டால் குற்றம் யாருடையது? அப்பாதுரையாருடையதா? அல்லது பேச்சாளருடையதா?

'யான் கூறியவற்றிற்கு மறுப்புத் தர விழைந்தீரேயானால், யானும் மற்றவற்றிற்கு விளக்கந் தரக் கடமைப்பட்டவனாவேன்' என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

—புலவர்

க. சி. இராசியண்ணன்.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
...சங்குமில் ..., திண்டுக்கல்ரோடு, மதுரை.

என்றென்றும் அறம் வெல்லும்
நின்றென்றும் நம் புகழ் சொல்லும்

அறம் ஆற்றுவோரில் பல வகை உண்டு.

ஊரார் போற்ற வேண்டும் என்பதற்காகச் செய்பவர்கள் சிலர்.

ஊராள்வோர் கடைக்கண் தம் மேல் விழ வேண்டும் என்பதற்காகச் செய்பவர்கள் சிலர்.

செய்தித் தாள்களில் தங்கள் பெயர் பெரிய எழுத்துக்களில் வரவேண்டும் என்பதற்காகச் செய்பவர்கள் சிலர்.

அடுக்கடுக்காகக் கொடுமைகள் பல புரிந்துவிட்டு, அதனாலேற்படும் இழிவினைத் துடைப்பதற்காகச் செய்பவர்கள் சிலர்.

பரமண்டத்தில் இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் செய்பவர்கள் சிலர்.

ஆனால் எப்பலனையும் எதிர் நோக்காது, அறம் புரிபவர்களைத் தற்காலத்தில் காணுதல் அரிது.

"எதிர் வீட்டிலிருக்கும் ஏகாம்பரம், ஏழு ரூபாய் வீட்டில் குடியிருந்தானே; இப்பொழுது ஏழடுக்கு மாளிகையிலே குடியிருக்கிறானே! எப்படித் தெரியுமா?"

"எல்லாம் ஏழைகளின் வயிற்றிலடித்துச் சேர்த்த பொருளப்பா!"

ஊரார் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா! அதனால்தான் கைகாலெல்லாம் முடக்கு வாதத்தால் முடங்கிப் போயிருக்கிறது!"

"எச்சில் கையால்கூட காக்கை ஓட்டாத ஏகாம்பரம், உடம்பு தேறி விட்டால் ஏழுமலையானுக்கு வைரத்தால் நாமம் செய்து சாத்துவதாக வேண்டிக்கொண்டிருக்கிறானும்!"

இது ஒரு வகை!

மகேசுவரனிடத்தில் உள்ள மதிப்பால் அல்ல, ஏகாம்பரம், வைரத்தால நாமம் செய்து சாத்துவது; அவனுடைய நோயைப் போக்குவதற்காக, ஆண்டவனுக்கு அவன் தரும் கூலி அது.

"எஜமான்! நம்ம கணக்கப்பிள்ளை கந்தசாமி கேட்கிற போதெல்லாம் யோசிக்காம கடன் கொடுத்துக் கொண்டே வருகிறிங்களே; அவன் எப்படிங்க திருப்பிக் கொடுக்கப் போகிறான்?"

"அவனைப் பணத்தை யாருடா திருப்பித் தரச் சொன்னது! இன்னும் கொஞ்ச நாளானா வட்டியும் அசலுமா சேர்ந்து, அவன் நிலம் தானா நம்ம கைக்கு வந்து சேருது. அவன் நிலத்திலே தவிடு போட்டா தங்கம் விளையுண்டா! ஆண்டுக்கு மூன்று விளைச்சல்! அது போதாது நமக்கு"

'ஓகோ... அப்படிங்களா விஷயம். அது இப்பதான் புரியுது; அதுதான் தாராளமா உதவி செய்றிங்க"

இது ஒருவகை!

கந்தசாமி கஷ்ட முறுவதைக் காணச் சகியாமல், அவன் வாழ வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு செய்வதல்ல இவ்வுதவி. பணம் கடன் கொடுத்தால், அவனால் கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாது. பணத்திற்கு பதில் நிலத்தை உடமையாக்கிக்கொள்ளலாம் என்ற பேராசையால் உதவுவது இது.

"டேய் முனியா நாளைக்கு காந்தி ஜயந்திடா; ஆயிரம் பேருக்குச் சாப்பாடு போடனும்; அதுக்கு வேண்டியதெல்லாம் ஏற்பாடு செய்"

"நிறைய பணம் செலவாகுங்களே எசமான்!"

"பணம் செலவானா என்னடா; பர்மிட் கிடைக்குதே அது போதாது! இந்தச் செலவையெல்லாம் அதிலே சரிக்கட்டிடலாம். இந்த மாதிரியெல்லாம் அன்னதானம் செய்தாதாண்டா, நம்ம பெரிய புள்ளி, நம்மகிட்ட வாலாட்டக் கூடாதுன்னு, பர்மிட் சீக்கிரம் கொடுப்பாங்க. புரியுதா!"

இது ஒரு வகை!

காந்தி பக்தர் கனகசபை கவுண்டர். ஏழைகளுக்கு அன்னதானம் செய்து காந்தி ஜயந்தி கொண்டாடுவது, உண்மையிலே ஏழைகள் உணவு அருந்தி, பசி நீங்கி மகிழ வேண்டும் என்பதற்காக அல்ல; அரசியலாரிடமிருந்து அவர் எதிர் பார்க்கும் "பர்மிட்" அதிவிரைவில் வரவேண்டும் என்பதற்காகத்தான்.

★

இவ்வாறு ஒவ்வொருவரும் ஏதேனும் ஒன்றினை எதிர்நோக்கியே உதவி புரிகின்றனர். இத்தகையவை உதவிகளல்ல. கைம்மாறு கருதாது, வறியோர்க்கு, அவர் வேண்டுவனற்றைக் கொடுப்பதே ஈகையாகும். மற்றயவை எல்லாம் பலன் கருதி, எதிர் நோக்கிச் செய்தலாகும். இதனை,

"வறியார்க் கொன்றீவதே
ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர
துடைத்து"

(குறள் 221)

என்னும் குறளால் அறியலாம்.

பண்டைக் காலத்தில் நம்நாட்டை பல அரசர்களும், குறுநில மன்னர்களும், ஆண்டுவந்தனர். அவர்கள் அறம்பல புரிதலையும், விருந்தோம்புதலையும் தங்கள் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர்.

"அற்றார் அழிபசி
தீர்த்தல், அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்
புழி"

(குறள் 226)

என்ற இலக்கியத்திற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டிய, அன்னாருடைய வாழ்க்கைக் குறிப்புகளை, சங்ககால இலக்கியங்களில் நாம் காணும்பொழுது, நம் உள்ளம் இறும்பூதெய்துகின்றது. ஆனால் அதே நேரத்தில் அவர்களின் நிலையோடு நம் நிலையை ஒத்துநோக்குங்கால், நாம் நாணித் தலைகுனிய வேண்டியுள்ளது. அவர்களில் சிலரை ஈண்டு காண்போம்.

உலகிலேயே மிகக் கொடுமையான பிணி ஒன்று உண்டெனில் அது பசிப் பிணியேயாகும். வறுமையின் காரணமாக ஏற்படும் இப்பசிப் பிணியே பல தீமைகளுக்கும் வித்தாக அமைகிறது. "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்பது முதுமொழி. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர், தாம் இயற்றிய மணிமேகலை என்னும் நூலில், தீவதிலகை என்னும் பாத்திரத்தின் வாயிலான் மணிமேகலைக்கு, பசியின் கொடுமையால் நேரும் இன்னல்களைப் பற்றி விரிக்கும்பொழுது,

"குடிப்பிறப்பு அழிக்கும்
விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப்
பெரும்புணை விடூஉம்
நாண் அணி களையும்
மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு
புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி" —

(மணிமேகலை 75-80)

எனக் கூறுகின்றார்.

ஆதலால் மேற்கூறிய யாவற்றினுக்கும் காரணமான பசியையும், பசிக்குக் காரணமான வறுமையையும், நீக்குதலே போற்றற்குரியதாகும்; ஒருவனது கடமையுமாகும். இவ்வாறு வறியோரது பசிப்பிணி போக்கி வாழும் வாழ்க்கையே உண்மையான சிறந்த வாழ்க்கையுமாகும். இதனை:

....

"ஆற்றுநர்க்(கு) அளிப்போர்
அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள்
அரும்பசி களைவோர்
மேற்றே உலகின்
மெய்ந்நெறி வாழ்க்கை"

....

(மணிமேகலை 92 94)

ஏற்றகை மாற்றாமை
யென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா
மாண்கடன்...

....

(நாலடியார் எண் 98)

என்னும் பாடல்கள் வலியுறுத்துகின்றன.

இத்தகைய சிறந்த மெய்ந்நெறி வாழ்க்கை வாழ்ந்த பலருள், கடையெழு வள்ளல்களில் ஒருவனான வையாவிக் கோப்பெரும் பேகன் என்பவன், குறிப்பிடத் தக்கவன் ஆவான். இவனைப் பேகன் என்றும் அழைப்பர். மலைநாட்டுத் தலைவனாகிய இவன், சிறந்த கொடை வள்ளல். இவனது கொடைத் திறம்பற்றியும், அன்பு, வீரம் பற்றியும் பாடிய புலவர்கள் பலராவர். அவர்களுள் பரணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்.

பரணர் என்னும் புலவர், பேகனைப் புகழ்ந்து பாடும்பொழுது அவனது கொடைத் திறத்தை மாரிக்கு உவமையாக்குகின்றார். மாரியானது, வற்றிய குளத்தின் கண்ணும், அகன்ற விளை நிலத்தின் கண்ணும், களர் நிலத்தின் கண்ணும் சொரிகின்றது. வற்றிய குளத்தின் கண் சொரிவதால், குளம் நிறைந்து, அதனால் அக்குளத்து நீர், மக்களுக்குப் பயன்படுகிறது. அவ்வாறே அகன்றவிளை நிலத்தின் கண் சொரிவதாலும், அந்நிலத்திலுள்ள பயிர்கள் நன்கு விளைந்து, அதனால் பெரும் பயனை மக்கள் பெறுகின்றனர். ஆனால் எவர்க்கும் எவ்விதத்திலும் பயன் தராத களர் நிலத்தின் கண்ணும், மழை சொரிகின்றது. ஆதலால் மாரியானது, இன்னின்னவைதான் தம் நீரைப் பெறுவதற்குத் தகுதியுள்ளது தகுதியற்றது எனக் கருதாது, யாவற்றிற்கும் சொரிகின்றது. மேலும் மாரி புரியும் இவ்வரிய உதவி, எத்தகைய பலனையும் எதிர்நோக்காது செய்தலாகும். மாரியின் பெருமையைக் கூறுகையில் வள்ளுவப் பெருந் தகையார்,

"கைம்மாறு வேண்டா
கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங்
கொல்லோ உலகு"

என மிக அழகாகக் கூறுகின்றார்.

இத்தகைய மாரியன்னவன் பேகன், எனப் பரணர் போற்றுகின்றார். மாரியன்ன பேகன் எனக் கூறுவதிலிருந்து, வறுமை, பசி எனத் தன்னை நாடி இரப்போர் எவர் வரினும்–அவர் தகுதியுள்ளோராயினும், தகுதியற்றோராயினும், பேகன் உதவுகின்றான் என்பது புலனாகின்றது மற்றும் அவ்வுதவியும், எப்பலனையும் அவர்கள் மாட்டு எதிர் நோக்காது புரிகிறான் என்பதும் தெளிவாகின்றது. இதைக் கீழ்க் காணும் பாடலிலிருந்து நன்கு அறியலாம்.

"அறுகுளத் துகுத்து
மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா
துவர்நில மூட்டியும்
வரையா மரபின்
மாரி போலக்
கடா யானைக்
கழற்காற் பேகன்"

(புறநானூறு 142)

இதனைப் புலவர்கள் கொடைமடம் என்றும் கூறுவர். இவ்வண்ணம் பேகன் தன்னுடைய செல்வங்களனைத்தையும், தன்னை நாடி வந்தோர்க்கு கருணை உள்ளத்துடன் வாரி வழங்குகின்றானே, ஒருகால் இம்மையில பலன் கருதாது மறுமை நோக்கிச் செய்கின்றானோ என ஐயுறலாம். அத்தகைய ஐயத்திற்கும் இடம் அளிக்காது, பேகன் புரியும் உதவி மறுமை நோக்கியும் செயததன்று; பிறரின் வறுமை நோக்கியே செய்ததாகும் என்பதை,

....

"ஈந்துணை யாயினு
மீத்த நன்றெனா
மறுமை நோக்
கின்றோ வன்றே
பிறர், வறுமை
நோக்கின்றவன்
கைவண் மையே"

(புறநானூறு 142)

என்பதன்மூலம் விளக்குகின்றார்.

(மறுமையில் நமக்கு நம்பிக்கை இல்லை எனினும், புலவர் அத்தகைய ஐயத்தை எழுப்பி, அவரே அதற்கு எதிர்மறையில் விடை இறுத்திருப்பதால், நாம் அவற்றை மேலே குறிப்பிட்டோம்.)

ஆதலால் நாமும் நமது வாழ்க்கையில், கைம்மாறு கருதாது பிறர்க்கு ஈதலையே தலையாய கடன் எனக் கருதி, செயலாற்றி, பெயரும் புகழும் ஈட்டி, அவர்கள் வழி செல்வோமாக.

–ம. சந்திரசேகரன்.

அடுத்த இதழில்...

பன்மொழிப்புலவர்

கா. அப்பாத்துரையாரின்

இலங்கைப் பேச்சு

"வருங்கால உலகில் தமிழ்"

வெளிவரும்.

பாரதி பாடியது சரியே!

26-9-59-ஆம் நாள் வெளி வந்த "தென்றல்" இதழில், "சுந்தரனாரும் சுப்பிரமணியரும்" என்ற தலைப்பில், தோழர் ஒருவர் எழுதியிருந்த கட்டுரையைக் கண்ணுற்றேன். 'எதிர்ப்போர் எழுதுக' என்ற இதழாசிரியரின் எழுத்துக்கள் என் எண்ணத்தில் மோதின. மோதியதன் பயன்: நீங்கள் படிக்கும் இக் கட்டுரை.

மலையாளப் பகுதியிலே பிறந்து, ஆங்கில இலக்கியச் சூழலில் மூழ்கிக் கிடந்த பேராசிரியர் சுந்தரனார் தன் நாடகத்தைத் தொடக்கும்போதே,

"ஆரியம்போல் உலக வழக்
கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

பாவலன் அவன் வழியும் அறிவீர்!

என்று செந்தமிழ் அன்னையின் சீர் பாடித் துவக்குகின்றார்.

ஆனால், தமிழ் மண்ணிலே பிறந்து தமிழரிடையே வாழ்ந்து-தமிழ் மண்ணிலே மடிந்த பாரதி-வடவாரியப் பாஞ்சாலியின் பெருமையைப் பாட எடுத்துக்கொண்ட கதையிலும் பிரம 'ஸ்துதி'யையும், சரஸ்வதி 'ஸ்துதி'யையும் முதலில் பாடி, பின்னரே ஹஸ்தினாபுரத்தின் சிறப்பைக் கூறத் துவங்குகின்றார்.

"இது கிடக்கட்டும்" என்று பாரதியாரின்மேல் எடுத்த எடுப்பிலேயே ஒரு பெருங் குற்றத்தைச் சுமத்துகின்றார்.

மலையாளத்திலே பிறந்த ஒருவர், தான் பாடத் துவங்கும் நாடகத்தின் முதலில், தமிழ் அன்னையைத் துதிக்க;-தமிழகத்திலே பிறந்த ஒருவர், தான் பாடத் துவங்கும் காவியத்தில், பிரமத்தையும்-கலைமகளையும் வணங்கலாமா?

கட்டுரையை வடித்த நண்பர் அவர்கள், ஒன்றை மனோன்மணியத்தில் காணத் தவறிவிட்டார்களென்றே கருதுகிறேன். அல்லது, பாரதிமேல் உள்ள சீற்றம், அவரின் அறிவுக் கண்களை மறைத்துவிட்டதோ என்னவோ?

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், தான் பாடும் இலக்கியத்தின் முதலில், தமழ் அன்னையை வணங்கவில்லை. அதற்கு மாருக, எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பின், இரண்டாவதாகத் தமிழ்த் தெய்வத்தைப் போற்றுகிறார்கள். அவர் பாடிய இறை வணக்கப் பாடல் இதோ:

வேத சிகையும்
விரிகலையும் மெய்யன்பர்
போதமும் போய்த்தீண்டாப்
பூரணமே-பேதமற
வந்தெனைநீ கூடுங்கால்
வாழ்த்துவர்யார்? வாராக்கால்
சிந்தனையான்
செய்ம்முறையென் செப்பு?

இனியேனும் தான் செய்த தவறைத் திருத்திக்கொள்வாரா? அல்லது சுந்தரனார் அடிச்சுவட்டைப் பின்பற்றியே, பாரதியார் பிரம்ம ஸ்துதி பாடியிருக்கிறார் என்று பெருக்கி எழுதத் தலைப்படுவாரா? எதைச் செய்ய வல்லார்? கட்டுரையாளர் தான் பொய்யை எழுதுவதாலோ? என்னவோ? 'இது கிடக்கட்டும்' என்ற எழுத்துக்களைப் பெய்து வைத்திருப்பார்போல் தெரிகின்றது. 'இது கிடக்கட்டும்' என்ற சொற்களே அவரைக் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்கின்றன.

"உதும்பர தருவில்
ஒருகனி யதனுள்
பிறந்திறும் அசகம்
இவரிலுங் கோடி
பிறந்தார் என்போர்
புகழுடன் சிறந்தோர்"

என்பது மனோன்மணீய ஆசிரியரின் உவமை நலன் கனியும் பாடல்.

"வெற்றிகொள் புலையர்தாள்
வீழ்ந்துகொல் வாழ்வீர்
மொக்குள்தான் தோன்றி
முடிவதுபோல
மக்களாய்ப் பிறந்தோர்
மடிவது திண்ணம்"

என்பது, புரட்சிக் கவி பாரதியின் உவமை நலம் பெருகும் பாடல்:

இதைப்பற்றிக் கட்டுரையாளர் தரும் விளக்கம் விந்தையிலும் விந்தையாக உள்ளது.

"பாரதி இப்பாடலில் கையாண்டுள்ள ஒரே ஒரு உவமையைக் கண்டு மகிழும் நாம், அது அவரே கற்பனை செய்ததுதானா? என்று தேடிப் பார்த்தால், முடிவில் ஏமாற்றத்தைத் தழுவ வேண்டியுள்ளது. அதுவும் சுந்தரனார் கையாளும் உவமைகளில் ஒன்ருகவே போய் முடிகின்றது...அந்தப் புதுமைக் கவி அரைத்த மாவையே அரைத்து-அதே வட்டிலில் இட்டு-அரைவேக்காட்டுச் சரக்காக நம் முகத்திலே நீட்டுகிறார்" என்பது-தோழர் வேழவேந்தன் அவர்களின் எரிச்சல் மொழி.

இவ்விரு பாடல்களையும் தேர்ந்தாய்ந்து தெளிந்தால் வேற்றுமை இருப்பதை யாருமறிவர். "அத்திப் பழத்திலே கொசுக்கள் தோன்றுகின்றன; அதையுண்டே வாழ்கின்றன; பின் பழம் அழுகி விழும்போது தாமும் அழுகி மடிகின்றன. இதுபோல, உலகிலே மக்கள் தோன்றுகிறார்கள்; வாழ்கின்றார்கள்; பின்னர் மடிகின்றார்கள். இதனால், மனிதர்களுக்குச் சிறப்பில்லை. அத்திப் பழக் கொசுக்களைப்போல், இவர்களும் மடிந்தொழிவதால், கொசுக்களுக்கும் மனிதர்களுக்கும் வேறுபாடென்ன இருக்கமுடியும்? அதனால், மனிதர்களாகப் பிறந்தோர் புகழுடன் வாழவேண்டும். அப்புகழ் கிடைக்குஞ் செயல்களில் ஈடுபட வேண்டும்" என்று சுந்தரனார் சொல்லுகின்றார்.

ஆனால், பாரதி எடுத்தாளும் உவமையும் அதன் பொருளும், சுந்தரனார் எடுத்தாண்ட உவமைக்கும் பொருளுக்கும் முற்றிலும் வேறுபட்டதாகும்:

"நீர்மேல் எழுங்குமிழியைப் போன்றது மனிதர்களின் வாழ்க்கை. அதனால், மனிதர்களாகப் பிறந்தோர் ஒருநாள் இறப்பது திண்ணம். அதற்குள்ளாக, புலையர்களின் வெற்றிக்குத் துணையாக அவர்களின் பாதங்களில் ஏன் வீழ்கின்றீர்கள்? எனவே, தாயகத்தைக் காக்கப் புறப்படுங்கள்" என்று சுப்பிரமணியனார் மொழிகின்றார்.

சுந்தரனாரும் - சுப்பிரமணியனாரும் கொண்ட கருத்து ஒன்றானாலும் விளக்கும் முறையில் வேறுபாடு மிகவுண்டு. சுந்தரனார். 'அத்திப்பழம்' என்றால் சுப்பிரமணியனார், 'நீர்' என்கிறார். சுந்தரனார் 'கொசுக்கள்' என்றால், பாரதியார், 'குமிழிகள்' என்கிறார். சுந்தரனார்,'மொழிக்காகவும் நாட்டுக்காகவும்' பாடுபட வேண்டுமென்றால், பாரதியார் எதிர்மறையில், 'புலையர் தாளில் வீழ்ந்துவிடாதீர்கள்' என்கிறார். சுந்தரனார்,

"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றா
மைநன்று"

என்றால், பாரதியார்,

"உறங்குவது போலுஞ்
சாக்கா(டு) உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்கிறார்.

சுந்தரனார் கொண்ட விளக்கத்தையே, பாரதியாரும் கொண்டிருப்பதாக நண்பர் முடிவுகட்டுவாரானால், இவ்விரு குறட்பாக்களில், ஒரு குறட்பா நமக்குத் தேவையில்லையே? இதற்கு என்ன மாற்றம் கூறவல்லீர்? ஒருவர்மேல் உள்ள வெறுப்பு தங்களின், உட்புலன் - புறப்புலன் இரண்டையுமே மறைத்துவிட்டதே!

தற்காலத்து நம்மிடையே வாழ்ந்து வரும் ஒரு கவிஞர் பெருமகன் பாடுகின்றார் கேளுங்கள்

"அறுதியிட்டுரைப்பன் இந்த
அவனியின் நலமோண்ணி
உறுதிகைக்கொள்வார் ஆவி
உடலதற் கீவார்போரில்
குருதிசிந்தித் தன்னாட்டின்
கொடியினைக் காப்பார்மட்டும்
பரிதிபோல் நிற்பார்மற்றோர்
பனியெனவருவார் போவார்"

இக்கவிதையைப் பாடியவர், பேராசிரியர் சுந்தரனாரைக் காப்பியடித்தாரா? அல்லது புரட்சிக்கவி பாரதியாரைக் காப்பியடித்தாரா? எவரைக் காப்பியடித்தாரென்று தங்களால் விளக்கமுடியுமா?

புகழுடம்பெய்துபவர் பரிதிபோலவும்-மற்ற புல்லர்கள் பனியெனவும் நிற்கின்றார்கள். இதுவும் பேராசிரியரைப் பார்த்துத் தீட்டியதாக வல்லவோ தங்களின் நல்லறிவிற்குப் புலப்படும். அவ்வையுந் தங்களுக்கேற்பட்டால், அப்பாடலியாத்த புலவரிடமே தங்கள் கருத்தைச் சொல்லி நிலைநிறுத்துங்கள் பார்க்கலாம்.

'பாரதி மட்டும் சந்தக்கவி பாடினான்' என்று கூறிச் செருக்குற்றவர்களை யான் இதுவரையும் கண்டேனில்லை. அப்படியொருவன் கூறித் திரிவானாகில், அவனுக்குப் பாரதி பாடல்களைத் தவிர வேறொன்றும் இம்மியுந் தெரியாது என்றே மற்றையோர் கொள்வர். இதற்காகத் தேடி, சுந்தரம் பிள்ளையின் பாடலைக் காட்டுவது அறிவுடைமையாகாதென்றே அறிஞர்கள் கருதுவர்.

'சங்காலத்திருந்து இன்றுவரையும், சந்தக்கவிகள் பாடாத நாளே கிடையாது' என்று சுருக்கமாகச் சொல்லிக்கொள்கிறேன். கலித்தொகை. சிலப்பதிகாரம், பெரிய புராணம், கம்பர் இராமாயணம், திருப்புகழ் இன்னோரன்ன இலக்கியங்களில் சந்தந் தவழும் தனிப் பாடல்களும் தொகைப் பாடல்களும் பலவுண்டு.

—10-ம் பக்கம்—

முல்லை

புத்தகம் புதிய முறையில்,
விரைவில் மணக்கும்.

★

புதுமைமிகு கலைகள், கதைகள்,
கட்டுரைகள், பாடல்கள்
இருக்கும்.

★

"முல்லை" :: சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு